## இணைப்பு - 2




# இத்தொகுப்புக்கு வாய்த்த கருவிநூல்கள்

1. மகாவம்சம்
2. யாழ்ப்பாணச் சரித்திரம்
3. தமிழ்நாட்டுப் போர்க்களங்கள்
4. நூற்றாண்டுகளில் தமிழ் : கா.பொ. இரத்தினம்
5. 19ஆம் நூற்றாண்டில் தமிழ் : மயிலை சீனி வேங்கடசாமி
6. தமிழ்ப்புலவர் வரிசை (31) நூல்கள்: கருப்பக்கிளர் சு.அ. இராமசாமிப் புலவர்
7. தமிழ் இலக்கிய வரலாறு,
8. தமிழனா - தமிங்கிலனா? : காசி. ஆனந்தன்
9. டாக்டர் கிறீன் - அம்பி
10. தமிழ்ப் புலவர் வரலாறு : ந.சி. கந்தையா
11. தமிழியற் சிந்தனை : சு. வித்தியானந்தன்
12. ஈழப்புலவர் பெருமக்களின் தனி வரலாறுகள் பல. தனிப்பாடல் திரட்டு நூல்கள் பல.
13. பல்வேறு மலர்கள், இதழ்கள், கட்டுரைகள், வரலாற்றுக் குறிப்புகள், துண்டு வெளியீடுகள்.

## ம. முத்துக்குமாரசாமிக் குருக்கள் (1853-1936)

பருத்தித் துறையைச் சேர்ந்த புலோலியில் தோன்றியவர். இவர் தந்தையார் மகாதேவ ஐயர்.

இவர் தம் தந்தையாரிடமும் வண்ணார் பண்ணை ஐயாத்துரை ஐயரிடமும் தமிழ், வடமொழி இலக்கண இலக்கியங்களைக் கற்றார். கோயில் பூசகர் பணியாற்றினார். தம்மை நாடிய மாணவர்களுக்கு இரு மொழியும் கற்பித்தார். புராணச் சொற்பொழிவுகள் செய்தார்.

பசுபதீசுவரன் அந்தாதி, சிவபெருமான் அலங்காரம் என்பவை இவர் இயற்றிய நூல்கள். தனிப்பாடல்களும் பாடினார்.

## வெ. முத்துக்குமாரசாமிக் குருக்கள் ( - 1949)

முத்துக்குமாரத் தம்பிரான் என்பவரும் இவர். இவர் தந்தையார் வெற்றிவேற் பிள்ளை. இவர் யாழ்ப்பாணத்துப் புலோலியில் தோன்றியவர்.

தில்லை ஈசானிய மடத்து இராமலிங்க அடிகளிடம் இலக்கண இலக்கியங்களைக் கற்றார். சூரியனார் கோயில் ஆதீனத்தில் துறவு பூண்டு வாழ்ந்தார். சிவஞானபாடியம் சிவாக்கிரபாடியம் முதலிய நூல்களை ஆய்ந்து வெளியிட்டார்.

முத்தி நிச்சய பாடியம் என்னும் நூல் தருமபுர ஆதீன வழியே வெளிவருவதற்கும், சிவக்கவிமணி சி.கே.சுப்பிரமணிய முதலியார் எழுதிய பெரியபுராண உரை வெளிவருவதற்கும் உதவியாக இருந்தார்.

‘இலக்கணச் சாமி’ எனப் போற்றப்பட்டவர் இவர்.

## முத்துக்குமாரர் (19ஆம் நூற்றாண்டு)

வட்டுக்கோட்டையினராகிய இவர் கஞ்சன் காவியம், வலைவீசு புராணம், தேவசகாய நாடகம், சீமந்த நாடகம், பதுமாவதி நாடகம் என்பவற்றை இயற்றினார்.

## ஆ. முத்துத் தம்பிப் பிள்ளை (1858-1917)

இவர் யாழ்ப்பாணம் நாவலர் கோட்டத்தினர். பிரபோத சந்திரோதய வசனம், விவேகானந்த சுவாமிகள் பிரசங்க மொழி பெயர்ப்பு, யாழ்ப்பாணச் சரித்திரம், இலங்கைச் சரித்திர சூசனம், ஈழமண்டலப் புலவர் சரித்திரம், தென்மொழி வரலாறு, நன்னூல் உதாரண விளக்கம், நன்னூல் இலகுபோதம், அபிதான கோசம் முதலிய நூல்களை இயற்றினார். **அபிதான கோசம்** என்பது தமிழில் தோன்றிய **கலைக் களஞ்சிய நூல்களுக்கு முன்னோடி** (1902)

ஆங்கிலம் - தமிழ் அகராதியும் செய்தார்.

மானிப்பாய் என்னும் ஊரில் ஆறுமுகம் பிள்ளை என்பார் மகனாராகப் பிறந்தவர் இவர். பிறந்த நாள் 18.4.1858. நாவலப்பிட்டியில்



1876 இல் தமிழாசிரியப் பணி ஏற்றார். 1880 இல் தமிழகம் வந்தார். திருத்துறைப்பூண்டி, நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் பணி புரிந்தார். பொறையாற்றில் ‘சத்தியாபிமானி’ என்னும் இதழாசிரிய ரானார். 1885இல் சென்னை சேர்ந்து ஆண்டர்சன் தெருவில் ‘குயிலி அச்சகம்’ என ஓர் அச்சகம் தொடங்கிச் சீரிய பணி செய்தார்.

1890ஆம் ஆண்டில் விக்டோரியா இயற்கை வரலாற்றுக் கழகத்தின் துணை ஆணையரானார். 1893 இல் ஈழம் சென்று வண்ணார் பண்ணையில் இருந்த ஆறுமுக நாவலர் வீட்டை விலைக்கு வாங்கி ‘நாவலர் கோட்டம்’ எனப் பெயரிட்டார். நாவலர் அச்சகம் நிறுவினார். மருத்துவம் பயின்று அப்பணியும் புரிந்தார். மருத்துவமனையும் அமைத்தார். ‘தமிழ் மருத்துவச் செய்தி’ என்னும் மாதிகையும் நடத்தினார். அரும்பணி பல புரிந்த இவர். 3.11.1917 இல் இயற்கை எய்தினார். உழைப்பின் உயர்வுக்குச் சான்றாம் வாழ்வு இவர் வாழ்வு.

## முத்துத் தம்பிப் புலவர்

இவர் இயற்றியது யேசுக் கிறித்து நாதருடைய திருப்பாட்டு களின் மேல் ஒப்பாரி என்பது (யாழ்ப்பாணம் 1892)

## முத்துராசர்

இவர் சோழநாட்டு உறையூரினர். இவர் இயற்றிய கயிலாச மாலை என்னும் நூல், சிங்கை ஆரியச் சக்கரவர்த்தி யாழ்ப்பாணத்து நல்லூரில் ஆட்சி செய்த வரலாறு கூறுவது. கைலாய நாதர் கோயில் கட்டியது. தமிழ்நாட்டில் இருந்து வேளாளர் பலரை அழைத்துக் குடியேற்றியது ஆகியவை பற்றியும் கூறுகிறது.

## முருகேச பண்டிதர் (1830-1900)

இவர் ஊர் சுன்னாகம். தந்தையார் பூதப்பிள்ளை. தாயார் நாச்சியம்மையார். இவர், சுன்னாகம் குமாரசாமிப்புலவர், சரவண முத்துப் புலவர் ஆகியவர்களின் ஆசிரியர். மயிலணிச் சிலேடை வெண்பா, நீதிநூறு, சந்திர சேகர விநாயகர் ஊஞ்சல், பதார்த்த தீபிகை, குடந்தை வெண்பா என்னும் நூல்களை இயற்றியவர். அலங்கார பஞ்சக சண்ட மாருதம் என்னும் கண்டன நூலும், தனிப்பாடல்கள் சிலவும் இயற்றினார்.

இவர், சிவசம்புப் புலவர், சிவ சங்கரபண்டிதர் ஆகியவர் களிடம் பயின்றவர். இலக்கணப் புலமையால் இலக்கணக் கொட்டன் எனப் பாராட்டப்பட்டவர். யாழ்ப்பாணம், சிதம்பரம், கும்பகோணம் சென்னை முதலிய இடங்களில் தமிழ்ப்பணி ஆற்றியவர்.

இவர் தமிழ் கற்பித்த இடங்கள் இவையென்பதை,

களாக வெளியிட்டவர். தமிழ் வளர்க்கும் நோன்பும், தமிழினப் பற்றுமையும் இணைந்தவர். வண்மையும் உண்மையும் பொதுத் தொண்டும் மிக்கார். புலவர் போற்றும் புகழ் மிக்கார். இவர் வெளியிட்ட தமிழ் நூல்கள்: 111.

ஈழ கேசரி பொன்னையாவின் தமிழ்க் காதற்கு ஒரு குறிப்பு : கலையருவி க. கணபதிப் பிள்ளை ஈழ கேசரியை மருத்துவமனையில் படுக்கையில் கண்டார். அவர் உடல் நிலையறிந்து பேச அஞ்சினார். அதிகம் பேசினால் களைப்பாக இருக்கும் என்றார்.

"உங்களுடன் பேசாத வாய் எதற்கு? ஏதோ ஒரு நாள் இந்த வாய் தானாக மூடும்தானே" என்றார் பொன்னையா.

## மயில்வாகனப் புலவர் (1770-1816).

இவர் புலியூர் யமக அந்தாதி, யாழ்ப்பாண வைபவமாலை என்பவற்றை இயற்றியவர். பின்நூல் யாழ்ப்பாண வரலாற்றை உரை நடையில் கூறுவது.

இவர் இயற்றிய நூல்களுள் வெளிவராதவை; ஞானாலங்கார ரூப நாடகம், காசியாத்திரை விளக்கம், என்பவை.

இவர் மாகதல் என்னும் ஊரினர்; கூழங்கைத் தம்பிரானிடம் பயின்றவர். இவரொடு பயின்றவர் வைத்தியலிங்கச் செட்டியார். கூழங்கைத் தம்பிரான் ஒரு பாடத்தை ஒரு முறைக்கு மேல் பாடம் சொல்லமாட்டார். ஒரே முறையில் வைத்தியலிங்கச் செட்டியார் அறிந்துகொள்ள இயலார். ஆனால் மயில்வாகனப் புலவர் அறிந்து கொள்வார். ஆதலால், வைத்திய லிங்கர்க்கு மயில்வாகனர் மீள எடுத்துரைத்து உதவினார். இவ்வுதவி கற்பவர் நிலையறிந்து ஓதுதல், ஓதுபவர் நிலையறிந்து உதவுதல் என்பவற்றின் விளக்கமாம்.

***"ஆசான் உரைத்தவை அமைவுறக் கொளினும்***
***காற்கூ றல்லது பற்றல னாகும்"***

***"அவ்வினை யாளரொடு பயில்வகை ஒருகால்,***
***செவ்விதின் உரைப்ப அவ்விரு காலும்***
***மையறு புலமை மாண்புடைத் தாகும்"***

என்னும் நன்னூல் நூற்பாவுக்கு வாழ்வியல் விளக்கமாக அமைவது, மயில்வாகனர் கற்றும், கற்பித்தும் காட்டியவையாகும்.

## மயிலுப்பிள்ளை

இவர் ஞானசவுந்தரி அம்மானை இயற்றியவர் (கொழும்பு 1900).

## மல்லிகம் முதலியார்

இவர் ஞானோதயம் (யாழ்ப்பாணம் 1841) நற்சமய சாட்சி (யாழ்ப்பாணம் 1845) ஆகிய நூல்களை இயற்றியவர்.



## யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம்

இதனை நிறுவியவர் த.கைலாசபிள்ளை. இச்சங்கம் கி.பி.1898 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

தமிழ் மொழியைப் பலதுறைகளிலும் விருத்தி செய்வதற்குத் தேர்வுகள் ஏற்படுத்திப் பட்டங்களும் பரிசுகளும் வழங்குவதே இச் சங்கத்தின் நோக்கம்.

இச்சங்கம் பத்துப் பேரைக் கொண்டது.

சங்கத்தின் தலைவர் த.கைலாச பிள்ளை. செயலாளர் மா. வைத்தியலிங்கம் பிள்ளை. இவர் யாழ்ப்பாணத்து வண்ணார் பண்ணைச் சைவப் பிரகாச வித்தியாசாலை முதலாசிரியராவர். இச்சங்கத்தின் ஏனைய உறுப்பினர்: அ. குமாரசாமிப்பிள்ளை, சு. ஏரம்பையர், ம.க.வேற்பிள்ளை, ஆ. முத்துத் தம்பிப் பிள்ளை, அ.அருணாசல ஐயர், ஆ. சிதம்பரப்பிள்ளை, ச. சரவணமுத்துப் பிள்ளை, ச. சிவப்பிரகாசம் பிள்ளை என்போர் ஆவர்.

இச்சங்கத்தினர் ஒவ்வோர் ஆண்டும் ஆவணித் திங்களில் வண்ணார் பண்ணையிலும் குறிக்கப்பட்ட பிற இடங்களிலும் தேர்வு நடத்தினர். முதலாம் தேர்வுக் குரியவர் இருபத்தோராவது வயது முற்றுப் பெறாதவராய் இருந்தனர். அத்தேர்விலே தேர்ச்சி பெற்ற வருக்குப் பால பண்டிதன் என்ற பட்டம் வழங்கப்பட்டது. அதற்குரிய பாடங்கள், இலக்கணம், இலக்கியம், பூமிசாத்திரம், கணக்கு, இதிகாசம், பிரத்தியுத்பாதனம், கையெழுத்து, நிகண்டு, படிப்பிக்கும் திறமை என்பன.

இரண்டாம் தேர்வுக்குரியோர் இருபத்துமூன்றாவது வயது முற்றுப் பெறாதவராய் இருந்தனர். அத்தேர்விலே தேர்ச்சி பெற்றவருக்குப் பாரதி என்ற பட்டம் வழங்கப்பட்டது. தேர்வுக்குரிய பாடங்கள் இலக்கணம், இலக்கியம், பிரகிருதி சாத்திரம், கணக்கு, இதிகாசம், பாட்டை வசனமாக்கல், குறித்த ஒரு விசயத்தைப் பற்றி எழுதுதல், வைத்தியம், சோதிடம், சிற்பம் என்பனவற்றுள் குறித்தபடி ஒன்று என்பவை.

மூன்றாவது தேர்வுக்குரியவர் இருபத்தேழாவது வயது முற்றுப் பெறாதவராய் இருந்தனர். அத்தேர்விலே தேர்வு பெற்றவருக்குப் பண்டிதன் என்ற பட்டம் வழங்கப்பட்டது. அத்தேர்வுக்குரிய பாடங்கள் இலக்கணம், தருக்கம், செய்யுளியற்றல், சரித்திரம் எழுதுதல், சமற்கிருதம், வைத்தியம், வானசாத்திரம், சிற்பம் என்பனவற்றுள் இட்டப்படி ஒன்று என்பவை.

நான்காவது தேர்வுக்குரியவர் முப்பதாவது வயது முற்றுப் பெறாதவராய் இருந்தனர். அத்தேர்விலே தேர்ச்சியடைந்தவருக்கு புலவன் என்ற பட்டம் வழங்கப்பட்டது. அத்தேர்வுக்குரிய பாடங்கள்

செய்யுள்களும் உண்டு (1637) இந்நூல் யாழ்ப்பாணத்தில் 1896 இல் பதிப்பிக்கப்பட்டது. பதிப்பித்தவர் தியாகராசப் பிள்ளை என்பவர். சக்தியோகுமையூர் அம்மானை, திருச்செல்வர் அம்மானை முதலிய வற்றையும் பூலோகசிங்கர் இயற்றினார். இவர்க்கு அருளப்பநாவலர் என்னும் பெயரும் உண்டு.

## பீற்றர் பெர்சிவல் (19ஆம் நூற்றாண்டு).

கிறித்தவத் திருத் தந்தையார் இவர். யாழ்ப்பாணத்தில் தொண்டாற்றியவர். தமிழைக் கற்று ஆறுமுக நாவலர் துணையொடு விவிலியத்தை மொழிபெயர்த்து அச்சிட்டவர். தமிழ்ப் பழமொழி களைத் தொகுத்து ஆங்கில மொழிபெயர்ப்புடன் வெளியிட்டவர். ஆங்கில - தமிழ் அகராதி ஒன்றினையும் வெளியிட்டார். நீதிநூல் திரட்டு என்னும் நூலை வெளியிட்டதுடன், ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, நன்னெறி, நீதிநெறி விளக்கம் முதலிய வற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தும் வெளியிட்டார். 1855இல் சென்னையில் தினவர்த்தமானி என்னும் செய்தித்தாளை வார இதழாக அச்சிட்டார். முதன்முதல் வெளியான தமிழ்ச் செய்தித்தாள் இதுவே.

## பேதுருப் புலவர் (17ஆம் நூற்றாண்டு).

இவர் தெல்லிப்பழை என்னும் ஊரினர்.

சந்தியோகுமையோர் அம்மானை, ஞானப்பள்ளு என்னும் நூல்களை இயற்றினார்.

## பேரம்பலப் புலவர் (1859-1935).

இவர் யாழ்ப்பாணத்து வேலணையூரினர். இவர் தந்தையார் கோணாமலை, தாயார் சிவகாமியம்மை. வண்ணைச் சிலேடை வெண்பா, கடம்பரந்தாதி, வேலணை இலந்தைக் காட்டுச் சித்தி விநாயகர் இரட்டைமணி மாலை முதலிய நூல்களை இயற்றினார். தனிப்பாடல்கள் பல பாடினார்.

புலவர் கனகசபைப் பிள்ளை, கந்தப் பிள்ளை ஆகியோரிடம் இளமையில் தமிழ் கற்றார், சோதிடமும் தேர்ந்தார். தாம் கற்றதோடு கற்ற புலவர்களோடு அளவளாவுதல் பெற்றார். இவரிடம் பயின்று தமிழறிஞர்களாக விளங்கியவர் பலர். இளமையில் அகராதி ஒன்றனை நண்பரிடமிருந்து பெறுதற்கு இவர் பாடிய பாட்டு.

> ***"சாந்தலிங்கம் என்றிச் சகம்பழிச்ச வாழ்வுகூர்***
> ***சாந்தலிங்க சோதிடநற் சாகரமே - ஓர்ந்தும்***
> ***அகராதி தன்னை அனுப்பும் சிலசொல்***
> ***தகவாக நானுணரத் தான்"***



## வரத பண்டிதர் (18ஆம் நூற்றாண்டு)

சிவராத்திரிப் புராணம், ஏகாதசிப் புராணம், அமுதாகரம், கிள்ளைவிடு தூது, பிள்ளையார் கதை முதலிய நூல்களைப் பாடினார்.

இவர் சுன்னாகத்தினர். இவர் தந்தையார் காசி அரங்கநாதர் என்பவர். வரத பண்டிதர், வரதராச பண்டிதர் எனவும் வழங்கப் பட்டார்.

## வருத்தலை விளான் மயில் வாகனப் புலவர்

இவர் மயிலை மும்மணிமாலை, விநாயகர் அகவல், மாவைப் பதிகம், இணுவைப் பதிகம் நகுலேசுவரர் விநோத விசித்திரப் பூங்கொத்து என்பவற்றை இயற்றினார்.

## விசுவநாத சாத்திரியார் ( - 1836)

அராலி என்னும் ஊரினர் இவர். தமிழ்ப்புலமையுடன் கணியப் புலமையும் உடையவர்.வண்ணைக் குறவஞ்சி, நகுலமலைக் குறவஞ்சி, வாக்கிய கரண கிரகணம் என்பவற்றை இயற்றியவர். 'இராசாவின் கணிதர்' என்னும் சிறப்புப் பெயரை அரசினரால் பெற்றவர் இவர்.

## விசுவநாத பிள்ளை. வே.மாவை.

இவர் சபாபதி நாவலரின் மாணவர். திருமந்திரத்தைக் குறிப்புரையுடனும் வேதாரணியம் வை.வே. இரமண சாத்திரியின் ஆராய்ச்சி உரையுடனும் வெளியிட்டார். (1911)

## விசுவநாத பிள்ளை (1820-1880)

யாழ்ப்பாணத்து மல்லாகம் என்னும் ஊரினர் சுதுமலையினர் என்றும் கூறுவர். சென்னைக் கல்வித்துறைத் தலைவர்.அலுவலகத்தில் மொழி பெயர்ப்பாளராகப் பணிபுரிந்தவர். வின்சுலோ அகராதி வெளிவருவதற்குப் பெரிதும் உதவியவர். இவர் சென்னை கோமளேசு வரன் பேட்டையில் இருந்தார். இவர் மகனார் கனகசபைப் பிள்ளை ஆவர்.

இளமையில் கிறித்தவராகமாற்றப்பட்டார். என்றும் பின்னர் சைவம் சார்ந்தார் என்றும் கூறுவர். ஆறுமுக நாவலரும் இவரும் சமயத்தால் எதிர் எதிராக நின்றதுண்டு. நாவலர் எழுதிய சைவ தூடண பரிகாரம் என்னும் நூலுக்கு மறுப்பாக இவர் சுப்ரதீபம் என்னும் நூலை வெளியிட்டார். தில்லையில் இருவரும் எதிரெதிர் வாதிட்டு நாவலர் வென்றதால் அதனை ஏற்றுச் சைவத் தொண்டில் நிலைத்தார். இவர் தமிழ் ஆங்கில அகரவரிசை, வீச கணிதம், காலதீபிகை, கலைஞானம், அட்சரகணிதம் முதலியவற்றையும் இயற்றினார்.

இவன் பரராச சிங்கன் எனவும் வழங்கப்பட்டான். சிறந்த தமிழ் அறிஞனாகவும் பாவலனாகவும் கொடையாளனாகவும் விளங்கினான். அந்தகக் கவிவீர ராகவரைப் பாராட்டிப் பரிசில் வழங்கியவன் இவன். சடையப்பவள்ளல் கண்டிநாட்டிப் பஞ்சம் நீங்க உதவிய கொடையைப் பாராட்டி இவன் பாடிய பாடல் சிறப்புமிக்கது. "இரவுநண் பகலாகினென்" என்பது அப்பாட்டு.

## பாக்கிக்கோ பிரான்சஸ் (19ஆம் நூற்றாண்டு).

இவர் சந்தானான் சமூகவிலாசக் கும்மி இயற்றியவர் (யாழ்ப்பாணம் 1855).

## பாண்டியனார் புலவர் (1903-1956)

இவர் நெல்லை மாவட்டத்து மலையடிக் குறிச்சி என்னும் ஊரினர். இவர் தாயார் பெயர் கோமதியம்மை. தந்தையார் பெயர் சிவன்.

இவர், தாமே முயன்றும் தக்கார் சிலரை அடுத்தும் தமிழ் கற்றார். ஊர்பல அலைந்தும் உழன்றும் ஆர்வம் குன்றாராய்க் கற்று மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வுக்கு முயன்றார். வறுமைப் பாட்டினால் ஒருமைப்படா நிலையில் பால பண்டிதத் தேர்வு அளவில் நின்றார்.

பின்னர் நெற்குப்பை கருப்பஞ் செட்டியார் உதவியால் ஈழம் சென்றார். வண்ணார் பண்ணைச் சைவப்பிரகாச வித்தியா சாலையைச் சார்ந்து பண்டிதத் தேர்வு கொண்டார். பன்னீராண்டுகள் ஆங்குத் தங்கியிருந்து தமிழ் கற்பிக்கும் பணியாற்றினார். அக் காலையில் புலவர் காஞ்சி, புணர்ப்பியல், நம்பியகவல் ஆகிய மூன்று நூல்களையும் அவற்றுக்கு விரிவுரைகளையும் இயற்றினார்.

புலமைச் செறிவும், மெய்யுணர்வு மேம்பாடும் உடையவை அந்நூல்கள். இந்நூல்களின் பின்னர் 'அழகியது' என்னும் வெண்பா நூலொன்றும் (327 பாடல்கள்) இயற்றினார். இது 1965இல் கொழும்பு மெய்கண்டான் பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பட்டது. நம்பியகவல் புதுக்கோட்டையைச் சார்ந்த இராமச்சந்திரபுரத்தில், அவர் வாழும்போதே அச்சிடப்பட்டது. அவர்தம் தூய தமிழ்நடை நெஞ்சம் அள்ளூறி மகிழச் செய்வது.

## பிரான்சிசுப் பிள்ளை

வயாவிளான் பிரான்சிசு எனப்படும் இவர் மூவிராசர் வாசகப்பா, இரட்சகப்பதிகம், இயேசு பிள்ளைத் தமிழ் முதலியவற்றை இயற்றினார்.

## பிலிப்பு Philip. J.

இந்துமத பாப்புமத சம்பந்த தீபம் (யாழ்ப்பாணம் 1842) என்னும் நூலை இயற்றினார்.



'பிரபுத்தபாரத' என்னும் ஆங்கில இதழின் ஆசிரியராகப் பணி புரிந்தார். சிறந்த பாவலர். கட்டுரை வல்லார். உயரிய கலைச்சொல் ஆக்கி. கல்வி நிலையங்கள் சிலவற்றை நிறுவியவரும் வளர்த்தவரும் இவர்.

## வைத்தியநாதச் செட்டியார்

அச்சுவேலியினர் இவர். நெல்லியோடைத் தேவி மேல் பிள்ளைத் தமிழ் பாடினார்.

## வைத்தியநாத தம்பிரான் (17ஆம் நூற்றாண்டு)

இவர் அளவெட்டியினர். சிதம்பரத்தில் வாழ்ந்து வியாக்கிர பாத புராணம் செய்தார். ஞானப் பிரகாசர் காலத்தவர். வடமொழி தென்மொழி வல்லார்.

## வைத்தியலிங்கச் செட்டியார்

இவர் அச்சுவேலி தெற்கிலே 1753இல் பிறந்தவர். நெல்லியோடைத் தேவி மீது பல தனிப்பாடல்களும் பிள்ளைக் கவி என்னும் சிற்றிலக்கியமும் படைத்தவர்.

## வைத்தியலிங்க பிள்ளை

வண்ணை நகரினர் இவர். வல்லை வடிவேலர் ஆசிரிய விருத்தம் பாடியவர் (யாழ்ப்பாணம் 1892)

## வைத்தியலிங்கம் பிள்ளை. க.

யாழ்ப்பாணத்து வண்ணையில் தோன்றியவர் இவர். வண்ணை வைத்தீசுரர் மேல் ஒருதுறைக் கோவையும், தோத்திர மஞ்சரியும் இயற்றியவர். (1913)

இவர் தந்தையார் பெயர் கந்தவனப் பிள்ளை.வைத்தியலிங்கம் பிள்ளை புலமையை,

**"எழுத்துச் சொற்பொருள் யாப்பணி ஐந்தும்**
**அழுத்தி மனத்தில் அமைவுடன் கற்றோன்**
**பற்பல இலக்கியம் பண்பொடு கற்று**
**விற்பன மாக விளங்கிய விவேகி**
**பாங்குறு மடக்கும் பற்பல அணியும்**
**தேங்குறச் செய்யுள் செய்யும் புலவன்"**

என்று புலமையரால் பாராட்டப்பட்டவர்.

## வையாபுரி ஐயர்

செகராச சேகரனின் அவைக்களப் புலவர் (1519 - 1961) இவர். இலங்கை அரசர்களுள் ஒரு சில குலம், குடிகளைக் கூறும் நூல்

கட்டுவன் சி. கணேசையரால் பாராட்டப்பட்டவர் இவர். இதன் முதற்பதிப்பு 1944 இல் வெளிவந்தது.

## செகராச சேகர மன்னர் (17ஆம் நூற்றாண்டு)

யாழ்ப்பாணத்து நல்லூரில் இருந்து ஆட்சிபுரிந்தவர் கனக சூரிய சிங்கை ஆரிய மன்னரின் மைந்தர் இவர். இவர் தமையனார் பரராசசேகர மன்னர். இவர் தமிழ்ச்சங்கம் ஒன்று நிறுவினார். தமிழ்ப் புலவர்களைப் புரந்தார். தக்கண கைலாய புராணம் இயற்றினார்.

இவர் அவைப் புலவர்கள் இவர் பெயரால் செகராச சேகர மாலை என்னும் நூலை இயற்றினர். அங்காதிபாதம், செகராச சேகரம், பரராச சேகரம் என்னும் மருத்துவ நூல்கள் இவர் காலத்தில் தொகுக்கப்பட்டன. இந்நூல்கள் ஏழாலை ஐ. பொன்னையா அவர்களால் அச்சிடப்பட்டுள்ளன. தக்கண கயிலாச புராணம் 632 விருத்தங்களையுடையது. இதற்கு அரசகேசரி பாயிரம் அளித் துள்ளார். பண்டிதராசர் இயற்றிய மற்றொரு தக்கண கைலாச புராணமும் உண்டு.

## செந்திநாதையர் (1840-1924)

ஏழாலை என்னும் ஊரினராகிய இவர் தந்தையார் சிந்நய ஐயர். இவர் காசியில் பல்லாண்டுகள் வாழ்ந்தமையால் 'காசி வாசி' செந்திநாதையர் என வழங்கப்பட்டார்.

இவர் சொற்பொழிவாற்றல், கற்பித்தல், தருக்கம் என்பவற்றில் சிறந்து விளங்கினார். சித்தாந்த சிகாமணி, 'கிறித்துமத காளை குடாரி' எனப்பட்டார். நீலகண்டப் பாடியத் தமிழ்மொழி பெயர்ப்புச் செய்தார்.

சாண் சத்திரியப் பிரசண்டமாருதம், ஞானபோத விளக்கச் சூறாவளி, சிவனும் தேவனா என்னும் தீய நாவுக்கு ஆப்பு, வீர பத்திராத்திரம், விவிலிய குற்சித கண்டன திக்காரம், தாந்திரிக துண்ட கண்டன கண்டனம், வச்சிர தண்டம் முதலியன இவர் எழுதிய கண்டன நூல்கள். கந்தபுராண விளக்கம், ஞானரத்தினாவளி, சீகாழிப் பெருவாழ்வின் சீவகாருணிய மாட்சி, தேவாரம் வேதசாரம், தத்துவ விளக்கம் மூலமும் உரையும் முதலியனவும் இவர் இயற்றினார்.

## செல்லையா (1867-1940)

வண்ணையைச் சேர்ந்தவர் (யாழ்ப்பாணத்து வண்ணார் பண்ணை) நல்லைச் சண்முகமாலை, கதிரை நான்மணிமாலை, நாவலர் பதிகம் மதுவிலக்குப்பாட்டு, ஒழுக்கமஞ்சரி, பாலர் பாடல், மதுமானிடக் கும்மி முதலியவற்றை இயற்றினார். கட்டுரைகள் பல வரைந்தார்.



இவர் தந்தையார் பெயர் வைத்தியலிங்கம். தாயார் பெயர் சீனியம்மாள். ந.ச. பொன்னம்பல பிள்ளையிடம் பாடம் கேட்டார். 1925 முதல் 1931 வரை ஈப்போ நகரில் திருவள்ளுவர் கலாசாலைத் தமிழாசிரியராக இருந்து பணியாற்றினார்.

அரிய நூல்களைத் தொகுத்தலில் பெரிய ஈடுபாடு கொண்டவர் இவர். வறுமைப் பொழுதிலும் அக்கடமையை மறந்தாரல்லர்.

## செவ்வந்திநாத தேசிகர் (1907-1937)

யாழ்ப்பாணத்துக் கரணவாய் என்னும் ஊரினர். தமிழ்மொழி வடமொழி ஆகிய இருமொழிப் புலமையர். தமிழ்மொழி ஆராய்ச்சி, மாவை முருகன் மும்மணிக்கோவை, நல்லைக் கோவை முதலிய நூல்களை இயற்றியவர். வித்துவான் சி. கணேசையரின் மாணவர்.

சிவசம்புப் புலவரின் நூல்களை அச்சிட்டு வெளியிட்டார். இவர் 30 ஆண்டே வாழ்ந்தார்.

## சேகுமதாறுசாகிப் புலவர் (19ஆம் நூற்றாண்டு)

மட்டக்களப்பைச் சேர்ந்த கருங்கொட்டித் தீவில் பிறந்தவர் இவர். பாமாலை, புலராபிசல் காவியம், பிள்ளைக் காவியம் முதலியவற்றை இவர் இயற்றினார்.

## நெ. சேனாதிராய முதலியார் (1750-1840)

தெல்லிப்பழை என்னும் ஊரினர். தந்தையார் நெல்லைநாதர். கூழங்கைத் தம்பிரான், சிற்றம்பலப் புலவர் ஆகியோரிடம் சேனாதிராயர் கல்வி பயின்றார். அம்பலவாண பண்டிதர், சரவண முத்துப்புலவர், ஆறுமுக நாவலர் முதலியோர் இவரிடம் பயின்ற வர்கள். சட்டவல்லுநர். இவர் இயற்றிய நூல்கள்: நல்லை வெண்பா, நல்லைக் குறவஞ்சி, நல்லை அந்தாதி, நீராவிக் கலிவெண்பா, ஊஞ்சற் பதிகங்கள் முதலியன. மானிப்பாய் அமெரிக்கமிசன் தொகுத்த அகராதித் தொகையானருள் இவரும் ஒருவர்.

தமிழ் ஆங்கிலம் போர்த்துக்கேயம் ஆகிய மும்மொழிப் புலமையர் இவர். நெல்லை நாதரும் தமிழ்ப் புலமை மிக்கவர்.

## சைமன்காசிச் செட்டி (1807-1861)

இவர் ஆங்கிலத்தில் அரிய சிலநூல்கள் இயற்றித் தமிழின் பெருமையை அறியச் செய்தவர். தமிழ்ப் புலவர்களின் பெயர்களை அகரவரிசைப்படுத்தி அவர்கள் வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதியவர். இந்நூல் புலவர் வரலாற்று நூல்களின் முதற்பட்டது என்பர். Tamil Plutarch என்பது இந்நூற் பெயர் (1859). உதயாதித்தன் என்னும் இதழொன்றும் இவர் நடத்தினார். வரலாற்று ஆய்வினராகிய இவர் அரசு அலுவலிலும், முறை மன்றப் பணியிலும் கடமையாற்றியவர்.

அவையோர் மகிழ்ந்தனர். கணேசையர், 'பண்டாரக் குளம்' என்னும் பெயருடைய நன்செய்யை நன்கொடையாக வழங்கினார்.

## சின்னத்தம்பிப் புலவர் (18 ஆம் நூற்றாண்டு)

இவர் இணுவை என்னும் ஊரினர்.

இணுவைச் சிவகாம சுந்தரியம்மை பதிகம், கயிலாசநாதன் பஞ்சவர்ணத் தூது, என்பவற்றை இயற்றினார் இளந்தாரி புராணம் என்பதொன்றும் இயற்றினார் என்பர்.

## சுப்பிரமணியபிள்ளை (19 ஆம் நூற்றாண்டு)

யாழ்ப்பாணத்து மானிப்பாய் இவர் ஊர்.

பதார்த்த விஞ்ஞானம் (மெடீரியா மெடிகா அகராதி, யாழ்ப்பாணம் 1887)

பாலவைத்தியம் (யாழ்ப்பாணம் 1889)

பிரசவ வைத்தியம் (யாழ்ப்பாணம் 1892)

என்னும் நூல்களை இயற்றியவர்.

## சுப்பையா (19 ஆம் நூற்றாண்டு பிற்பகுதியினர்)

ஏழாலை என்னும் ஊரினர்; 'நட்டுவச் சுப்பையா' என வழங்கப்பட்டவர். இவர் இயற்றிய நூல் கனகிபுராணம், அக் காலத்தில் வாழ்ந்த கனகி என்னும் திருத்தனிப் பெண்டின் வாழ்க்கையைப் பற்றியது. நகைச் சுவைமிக்க நூல். முதியவர்கள் நினைவில் நின்ற பாடல்கள் தொகுக்கப்பட்டு நூலாக்கம் கொண்டது. இப் புலவரைச் சரித்திர தீபகம் இயற்றிய சதாசிவம் பிள்ளை பாராட்டி எழுதியுள்ளார் (1886).

## சுவாமி ஞானப்பிரகாசர் (1875-1947)

யாழ்ப்பாணத்து மானிப்பாய் என்னும் ஊரில் தோன்றியவர் இவர். கத்தோலிக்க மத குருவராகத் திகழ்ந்தவர். இவர் இளமைப் பெயர் வைத்தியலிங்கம். இவர் தந்தையார் பெயர் இராசசிங்கம் சுவாமிநாதபிள்ளை, தாயார் பெயர் தங்கமுத்து அம்மையார்.

இவர் தமிழ்க் காதலால் அரும்பணி செய்தவர். தமிழ்ச் சொற்பிறப் பாராய்ச்சியில் ஈடுபட்டார். இவ்வாய்வுக்காகப் பதினெட்டு மொழிகளைப் பயின்றார். இவர் எழுபது மொழிகளைக் கற்றவர் என்றும் கூறுவர். தமிழைப் பிற மொழிகளொடும் ஒப்பிட்டு உலகத் தலைமொழி தமிழே என்பதை நிறுவினார். சொற்பிறப்பியல் அகர வரிசை வெளியிட்டார். யாழ்ப்பாணச் சரித்திர ஆராய்ச்சி, தமிழ் அமைப்புற்ற வரலாறு, தமிழரின் பூர்வ சரித்திரமும் சமயமும், தருக்கம், கிறித்துநாதர் சரித்திர ஆராய்ச்சி முதலிய நூல்களை இயற்றினார்.



## தம்பிமுத்துப்பிள்ளை

அச்சு வேலியினர் இவர். எஸ்தாக்கியர் நாடகம், (யாழ்ப். 1890) பாலியக்கும்மி (1892) என்பவற்றை இயற்றினார்.

## தம்பையா உபாத்தியாயர். ஜே.பி.

இவர் இயற்றியது பிரலாப கவிதை (கொழும்பு 1896)

## தம்பையாபிள்ளை. எஸ்.

இவர் திருமரியாயி பெயரில் தோத்திரப் பதிகம் இயற்றினார் (யாழ்ப்பாணம் 1888)

## தமிழ்ப் பல்கலைக்கழகம்

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் தனித்தன்மை வாய்ந்த கலாசாரச் செல்வத்தை உடையவர். எனவே, அவர்கள் மொழியையும் கலாசார பாரம்பரியத்தையும் போற்றிப்பேண ஒரு பல்கலைக்கழகம் வேண்டும் என்னும் உணர்வு கல்வி வல்லாரிடைத் தோன்றியது. இலங்கையின் வட பகுதியில் வாழும் மக்களும் கல்விமான்களும் அரசியல் தலைவர்களும் ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டுக் காலமாக இதுபற்றிக் கனவுகண்டு வந்தனர். சேர். பொன்னம்பலம் 1927ஆம் ஆண்டிலே பல்கலைக்கழக அமைவு பற்றிய தமது கருத்தைப் பின் வருமாறு குறிப்பிட்டார்!

“கல்வி என்பது ஓர் இறுக்கமான அச்சிலே வார்த்தெடுக்க வேண்டிய பொருளன்று. கல்வியின் பொருளும் கல்விமுறையும் காலத்துக்குக் காலம், சந்ததிக்குச் சந்ததி வேறுபட்டு வந்துளது. ஒரு காலத்தில் நிலவிய கருத்துக்களும் வழக்கங்களும் அடிக்கடி மறைந்து வேறு கருத்துக்களுக்கும் வழக்கங்களுக்கும் இடமளித்துள்ளன. காலப் போக்கில் இலங்கையின் வடபாகத்திலும் மேற்குப் பாகத்திலும் அங்கு வாழும் மக்களுடைய நன்மைக்காக ஒவ்வொரு பல்கலைக் கழகம் தேவைப்படும். பிற நாட்டுக் கல்விமான்கள் வற்புறுத்திய விஷயங்களையும் கல்வி முறைகளையும் அடிப்படையாகக் கொண்ட பல்கலைக்கழகங்களாக இவை தேவைப்படும். இப்பல்கலைக் கழகங்கள் எவ்வெவ் விடங்களில் அமைக்கப் படுகின்றனவோ அவ்வவ் விடங்களில் உள்ள நகரங்களின் அல்லது மாவட்டங்களின் பெயரைக் கொண்டவையாக இருக்க வேண்டும்”

இதே காலத்தில் சுவாமி விபுலானந்தர் யாழ்ப்பாணத்துக்கு ஒரு பல்கலைக்கழகம் வேண்டும் எனக் குரல் கொடுத்தார். அறிஞர்களும் அரசியல் தலைவர்களும் நடாத்திய இயக்கத்தின் பயனாக 1974ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இரண்டாம் திகதி யாழ்ப்பாண வளாகம் ஆரம்பிக்கப்பட்டது. 1979 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி

*உணர்ந்து பயிற்சிக் கல்லூரி மாணவர்களுக்குப் பயன்படும் நூல்கள் ஆக்கத் தூண்டினார். பணியில் இருந்து 1933 இல் ஓய்வு பெற்றாலும் 1953 வரை ஓயாப் பணியாற்றினார். இவர் இயற்றிய நூல்கள் ஆசிரியப் பயிற்சி முறை, ஆறுமுக நாவலர் வரலாறு, உளநூல், சைவகிரியா விளக்கம், சைவவமயசாரம், தருக்கநூல், சைவசமயத்தின் பெருமை, திருவாசக மணிகள், திருப்பெரு வடிவம், திருவருட் பயன், கந்தபுராண விளக்கம் என்பவை. இவர் ஆங்கிலத்தில், இந்து சமய சைவக் கொள்கை, தருக்கத்தின் இன்றியமையாமை என்னும் நூல்களை எழுதினார்.*

## சிவபாத சுந்தரம்

*மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில், புத்தர் அடிச்சுவட்டில் முதலிய நூல்களை வரலாற்றுச் செலவு முறையில் அருமையாக ஆக்கிப் படைத்தவர்.*

## ச. சிவானந்தையர் (1873-1916)

*தந்தையார் சபாபதி ஐயர். யாழ்ப்பாணத்துப் புன்னாலை என்னும் ஊரினர். சுன்னாகம் குமாரசாமிப் புலவரிடம் கற்றவர்; இவர் இயற்றிய நூல்கள் புலியூர்ப் புராணம், புலியூர் அந்தாதி, சனிபகவான் தோத்திரம், என்பவை. தருக்க சங்கிரகத்தைத் தமிழில் பெயர்த்தார். நம்பியகப் பொருள் விளக்கத்திற்கு ஓர் உரை எழுதினார். சென்னை கிறித்தவக் கல்லூரியிலும், சிதம்பரம் பச்சையப்ப முதலியார் பாடசாலையிலும் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.*

*இவர்க்குரிய தனித் திறமை, ஒருமுறை ஒரு பாடலைக் கேட்ட அளவில் அதனை மனத்தில் பதித்துக் கொண்டு வேண்டும்போது சொல்வதாகும். இதுவே ஓதாக் கல்வி என்பதாம். வள்ளலார் பெற்ற கல்வி இதுவேயாம்.*

## சிற்றம்பலப் புலவர் (18ஆம் நூற்றாண்டு)

*இவர் மாதகல் என்னும் ஊரினர்.*

*கண்டியரசன் மீது கிள்ளை விடு தூது பாடியவர் இவர். இருபாலைச் சேனாதிராய முதலியார் இவரிடம் கல்வி பயின்றாருள் ஒருவர்.*

## சின்னக் குட்டிப் புலவர் (19ஆம் நூற்றாண்டு)

*யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தில் பிறந்தவர் இவர்.*

*மாதகல் சிற்றம்பலப் புலவரின் மாணவர். தண்டிகைக் கனகராயன் பள்ளினை இயற்றியவர்.*

*தெல்லிப்பழையில் இருந்தவர் கனகநாயக முதலியார். கல்விச் செல்வம் பொருட் செல்வம் ஆகிய இரு செல்வங்களும் வாய்ந்தவர்*



*அடிகள் வாழ்வு 1980 செப்டம்பர் 1இல் யாழ் நகரில் நிறைவுற்றது.*

## சி.வை. தாமோதரம் பிள்ளை (1832-1901)

*சிறுப்பிட்டி வைரவநாத தாமோதரம் பிள்ளை என்பது, இவர் ஊர்ப் பெயர், தந்தையார் பெயர் கொண்ட விளக்கப் பெயர். ஏழாலை, பெருந்தேவியார் இவர்தம் அன்னையார். சுன்னாகம் முத்துக்குமாரக் கவிராயரிடம் கல்வி கற்றார். பி.ஏ., பி.எல்., பட்டம் பெற்று, புதுக் கோட்டையில் உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்தார்.*

*பழந்தமிழ்ப் பதிப்புக்குக் கால் கொண்டவர் ஆறுமுகநாவலர் என்றால் சுவர் எழுப்பியவர் இத் தாமோதரர் ஆவர். இவர் பதிப்பித்த நூல்களுக்கு எழுதிய முன்னுரை பழச் சுவடிப் பதிப்பின் வரலாற்றுப் பெட்டகமாகும்.*

*தொல்காப்பியம் சொல், பொருள் (நச்.), வீரசோழியம், இலக்கண விளக்கம், சூளாமணி, கலித்தொகை, தணிகைப் புராணம் ஆகியவை இவர் பதிப்புகள். சைவ சமய மகத்துவம் என்றொரு நூலும் எழுதினார்.*

## திருஞானசம்பந்த உபாத்தியாயர் (1839-1906)

*இவர், யாழ்ப்பாணத்துச் சுளிபுரத்தினர். மாணிக்கப் பிள்ளையார் திருவருட்பா, கதிர்காமவேலர் திருவருட்பா முதலிய நூல்களையும் தனிப்பாடல்கள் சிலவற்றையும் இயற்றியவர். ஆறுமுக நாவலரிடம் கற்றவர்.*

## திருஞானசம்பந்தம் பிள்ளை (1849-1911)

*நல்லூரினர், 'தர்க்ககுடார தாலுதாரி' என்று போற்றப் பட்டவர். தர்க்காமிர்த மொழி பெயர்ப்பு, அரகரதார தம்மியம், வேதாகமவாத தீபிகை நாராயண பரத்துவ நிச்சயம் ஆகிய நூல்களை இயற்றியவர்.*

*ஆறுமுக நாவலரிடமும் பொன்னம்பல பிள்ளையிடமும் பயின்றவர்.*

## மு. திருவிளங்க தேசிகர் (1859-1922)

*இவர் யாழ்ப்பாணத்தில் மானியம்பதி என்னும் ஊரில் பிறந்தவர். இவர் பிறந்த நாள் 30-4-1859. இவர் தந்தையார் பெயர் முருகேச முதலியார். தாயார் பெயர் சிவகாமி அம்மையார். தேசிகரின் தந்தையார் மானிப்பாயில் இந்துக் கல்லூரி ஒன்று நிறுவியவர். சிவநெறிச் சால்பினர்.*

*தேசிகர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் கொழும்பு தோமசுக் கல்லூரியிலும் கற்றுச் சிறந்தார். தோமசுக்*

நிலையத் தலைவராகப் பணிபுரிந்தவர். பி.ஏ., பட்டம் தாங்கியவர். தி.த.கனகசுந்தரம் பிள்ளையின் தம்பியார் இவர்.

## சரவணமுத்துப் புலவர்

நல்லூரினர்; இருபாலைச் சேனாதிராய முதலியாரிடம் பயின்ற மாணவர்; தருக்கம் செய்வதில் வல்லார்; ஆத்மபோதம் பிரகாசிகை, வேதாந்த சுயம்சோதி, நெல்லை வேலவர் உலா என்னும் நூல்களை இயற்றியவர். இவர் தொடங்கி முடிவு பெறாதது கோணேசர் குறவஞ்சி, களத்தூர் வேதகிரி முதலியாருடன் இலக்கண இலக்கியம் பற்றித் தருக்கம் செய்து அதுபற்றிய செய்திகளை உதயதாரகை என்னும் இதழில் எழுதினார்.

ஆறுமுக நாவலர், சம்பந்தப் புலவர், கார்த்திகேய உபாத்தி யாயர், சிவசம்புப் புலவர் என்பார் இவரிடம் கற்ற மாணவர்களுள் சிலர், இவர் தந்தையார் பெயர் மனப்புலி முதலியார் என்பது.

## சாமிநாத பண்டிதர் (20ஆம் நூற்றாண்டு)

இவர் யாழ்ப்பாணத்தினர். சிவஞான பாடியத்தையும் (1906) தேவாரங்களையும் அச்சிட்டவர். சைவநூற் சாரசங்கிரகம் என்னும் நூல் இயற்றியவர் (1920).

## சாமிநாத முதலியார் (18ஆம் நூற்றாண்டு)

இவர் யாழ்ப்பாணத்து மானிப்பாயைச் சேர்ந்தவர். இவர் தந்தையார் அருணாசலம் என்பவர். இராமநாடகம் தருமபுத்திர நாடகம் என்னும் நூல்களை இயற்றியவர். (1896)

## மு. சிதம்பரம்பிள்ளை (- 1889)

கிறித்தவ சமயம் சார்ந்தவர். தமிழ்ப்புலமை மிக்கார்; ஆங்கிலம் வல்லார். ஆங்கிலத் தமிழ் வரிசை, இலக்கிய சங்கிரகம், தமிழ் வியாகரணம், நியாயவிலக்கணம் (Elements of Logic; 1850), தனிப்பாடல் முதலியவை இவரியற்றியவை. யாழ்ப்பாணத்துச் சங்குவேலியினர் இவர். தந்தையார் முத்துக்குமாரசாமிப்பிள்ளை வில்லியம் நெவின்சு எனக் கிறித்தவ சமயப் பெயர் கொண்டவர். வின்சுலோ அகராதித் தொகுப்புக்கு உதவியவர்.

எட்டுக்கு அடுத்து, 'தொண்டு' என்னும் எண் நிற்றல் வேண்டும் என்றும் எண்பது தொண்பது; எண்ணூறு தொாண்ணூறு; எண்ணாயிரம் தொண்ணாயிரம் என அமைய வேண்டும் என்றும் வலியுறுத்தியவர். தொல்காப்பிய வழியதாகிய அவ்வாய்வு போற்றத் தக்கது.



வாளராகத் திகழ்ந்தார். 'சித்தாந்தப் பெருங்காவலர்' என்னும் விருது இவர்க்குத் தூத்துக்குடி சைவசித்தாந்த சபையினரால் வழங்கப் பட்டது.

பல்கலைக்கழக, 'இலங்கை வரலாறு' என்னும் நூலில் இவர் எழுதிய தமிழ் வரலாறு சிறப்புமிக்கது. சிவஞானபாடிய 'ஞானோத்தரப்' பகுதியை ஆங்கிலத்தில் பெயர்த்தார். இவர் இயற்றிய 'சகுந்தலை வெண்பா' அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அரங்கேற்றப் பெற்றது.

## நடராசன் சோ. நவாலியூர்

"காலங்கழிப்பதன் பொருட்டு எழுந்த பத்திரிகைகள் தமிழையன்றிப் பிறிது மொழியறியாத தமிழ் மக்களின் வாசிப்பு ஆவலைத் தீர்க்க எந்திர வேகத்தில் சிறுகதைகளையும் 'நாவல்' எனப்படும் புதுக் கதைகளையும் எழுதி எழுதிக் குவித்து அவ் வெற்றிடங்களை நிரப்புகின்றன என்றும் "பத்திரிகைத் தொழிலில் ஈடுபடும் பெரும்பான்மை ஆசிரியர்கள் நிரம்பிய தமிழ்ப் புலமையும் ஆற்றலும் இல்லாமலே தமிழிலக்கிய விமர்சன முயற்சியில் நுழைந்து கொள்கிறார்கள்" என்றும் சுட்டும் இவ்வாசிரியர் பன்னூலாசிரியர் கீதாஞ்சலி, மேகதூதம், இதோப தேசம், கல்வி நூற்கலைச் சொற்கள், சாகுந்தலம், மிருச்ச சடிகம் ஆகியவற்றை அரிய பெயர்ப்பாகவும் நாடகமாகவும் படைத்துள்ளார். நல்ல பாவன்மையர்.சு. நமச்சிவாயப் புலவர் (19ஆம் நூற்றாண்டு).

இவர் ஊர் ஆவரங்கால். தந்தையார் சுப்பிரமணிய பிள்ளை. உடுப்பிட்டி சிவசம்புப் புலவரிடத்தும், மட்டுவில் வேலுப்பிள்ளை யிடத்தும் இலக்கண இலக்கியங்களைக் கற்றவர். இவர் இயற்றிய இசைப் பாடல்களும், தனிப்பாடல்களும் கொண்ட தொகுப்பு நூல் வெளிப்பட்டுள்ளது.

இவரிடம் கல்வி கற்றார் பலர். கணபதிப்பிள்ளை அவருள் ஒருவர். அரியற்றிய ஈழமண்டல சதகத்தில் இவர்தம் பெருமையை எடுத்துக் கூறியுள்ளார்.

ஆறுமுக நாவலருக்காகக் கண்டனங்கள் பல, இதழ்களில் வரைந்தவரும் இவர். ஆறுமுக நாவலரைச் சிலர் ஏசியமை குறித்து வருந்தி இவர் இயற்றிய வெண்பாக்களுள் ஒன்று:

***"பித்தனென்றும் பேயனென்றும் பேய்வனத்தி லாடியென்றும்***
***எத்தனைபேர் ஈசனையும் ஏசினார் - அத்தனையும்***
***சான்றோர் அறியாரோ சாற்றுதியோ? மூத்தவா!***
***ஏன்தான் உனக்கிந்த ஏச்சு"***

2) ஆசிரியர் ஒருவரிடம் முறைப்படி கிரமமாகத் தமிழ் கற்றுத் தேர்ச்சி பெற்றார். இம் முயற்சியால் இலங்கைக்கு வந்து எட்டு மாதங்களுள் தமிழில் இலகுவாகப் பேசும் திறமை எய்தினார்.

வைத்தியக் கல்விக்குத் தேவையான கலைச் சொல் அகராதி ஒன்றும், ஆங்கில தமிழ் அகராதி ஒன்றும் தயாரித்தார். தொடர்ந்து வைத்தியக் கல்விக்கு வேண்டிய நூற்றொகுதிகள் முழுவதையும் தமிழில் மொழிபெயர்க்கத் திட்டம் தயாரித்தார்.

மலையாள மொழியில் அங்காதி பாத நூல் ஒன்றை வெளியிடுவதற்குக் கிறீன் வைத்தியரின் தமிழ் மொழி பெயர்ப்பை அடிப்படையாகக் கொள்ள அனுமதி வேண்டிக் கடிதம் ஒன்று வந்தது. இவ்வேண்டுகோள் வந்ததும் தமது முயற்சி அயல்நாட்டு அறிஞரின் அங்கீகாரத்தைப் பெறுகிறதென மனநிறைவடைந்தார்.

1864 ஆம் ஆண்டில் கிறீன் வைத்தியர் தமிழரைக் கண்டு என்ன எண்ணினார் என்பதை அவர் வரலாற்றை வரைந்த அம்பிகை பாகன் குறிப்பிடுகிறார்.

“வேட்டி காற்சட்டை யாகவும், சால்லை மேற் சட்டையாகவும், தலைப்பாகை தொப்பியாகவும், தாவர போசனம் மாமிச போசன மாகவும், குடிசை வீடாகவும் மாற்றமடைகின்றன. எனவே நான் எண்ணுகிறேன். கிறித்துவர்கள் ஆகாமல் தேசியத்தை இழப்பவர் களையே நான் காண்கிறேன். ஐரோப்பியரின் நடையுடை பாவனை களைப் பின்பற்றும் இந்துக்களைவிடக் கிறித்துவ இந்துக்களையே நான் காண ஆசைப்படுகிறேன்” “ஆம்! கிறித்துவராவது என்பது தேசியத்தை இழத்தல் அன்று” என்கிறார்.

கிறீன் வைத்தியர் தமது உதவியாளருடன் எழுதி மொழி பெயர்த்து அச்சிட்ட நூல்கள்:

1. கல்வின் கற்றரின் ‘**அங்காதிபாதம்** சுகரணவாதம் உற்பாலனம்’ பக். 204. 1852-1857.

2. போன்சயின் ‘**பிரசவ வைத்தியம்**’ பக். 258. 1857

3. துருவிதரின் ‘**இரண வைத்தியம்**’ பக். 504 1867

4. கிரேயின் ‘**அங்காதிபாதம்**’ பக். 838 1872

5. கூப்பரின் ‘**வைத்தியாகரம்**’ பக். 917. 1872

6. வெல்சின் ‘**கெமிஸ்தம்**’ பக். 516. 1875

7. டால்தனின் ‘**மனுஷ சுகரணம்**’ பக். 590. 1883

8. வாதிங்கின் ‘**சிகிச்சா வாகடம்**’ பக். 574 1884

9. Phama copoeia of India பக். 574. 1888

10. **மனுஷ சுகரண கலைச் சொற்கள்** பக். 134. 1872



11. **அருஞ்சொல்லகராதி** பக். 161. 1875

12. வேறுசில கைநூல், சிறுவெளியீடு பக். 110

யாழ்ப்பாணத்தில் இருந்து கிறீன் வைத்தியரும் அவர் மக்கள் நால்வரும் அமெரிக்கா திரும்பும் போது, “நாம் எல்லோரும் இப்பயணத்தின்போது உலகைவிட்டுச் செல்ல நேர்ந்தால், எமது சொத்தெல்லாம் யாழ்ப்பாணக் கல்லூரியில் மருத்துவபீடம் ஒன்றமைக்க வழங்கப்படுவதாக” என்று உணர்ச்சி ததும்பப் பெரு மனத்துடன் எழுதினார். அவர்தம் கல்லறையிலும் தாம் கொண்ட மருத்துவத் தமிழ்ப்பணியை மறவாமல்”

SAMUEL FISK GREEN

1822-1884

MEDICAL EVANGALIST TO THE TAMILS

Jesus my ALL.”

பொறிக்கச் செய்தார். அதனை அவர் வரலாற்றை வரைந்த அம்பிகை பாகனார் நேரில் கண்டு வந்து வரலாற்றில் பொறித்து வைத்தமை அருமையும் பெருமையும் மிக்கதாம்! போப் கல்லறைக் குறிப்பை ஒப்பதன்றோ கிறீனார் கல்லறைச் சிறப்பு.

## குமார குலசிங்க முதலியார் ( - 1884)

யாழ்ப்பாணத்துத் தெல்லிப்பழை என்னும் ஊரினர். முறைமன்ற மொழிபெயர்ப்புப் பணி (துவிபாஷி) புரிந்தவர். இவர் சில செய்யுள் நூல்களையும் தனிப்பாடல்களையும் இயற்றியவர். இவற்றில் ‘பதிவிரதை விலாசம்’ என்னும் நூல் மட்டும் கிடைத் துள்ளது.

## குமாரசாமி ஐயர் (1879-1947)

கோட்டைக் கல்லாறு என்னும் ஊரில் தோன்றியவர். இவர் தந்தையார் சின்னத்தம்பி முதலியார்; தாயார் சின்னம்மையார்.

யாழ்ப்பாணம் த.கைலாசபிள்ளையிடம் பாடம் கேட்டார். உரையும் பாட்டும் வல்லாராக விளங்கினார். ‘சித்தவைத்தியம்’ செங்குந்தமித்திரன் முதலிய இதழ்களில் கட்டுரை வரைந்தார். வடமொழியும் தேர்ந்தார். இவரிடம் பயின்றாருள் விபுலானந்தரும் ஒருவர்.

இவர் சித்த மருத்துவத்தில் சிறந்த திறம் கொண்டவர். இந்தியச் சித்த மருத்துவச் சங்க உறுப்பினராகவும் விளங்கினார். ‘வைத்தியக் கருவூலம்’ என்னும் நூலை (800 பாடல்கள்) இயற்றினாா. மலேரியா என்னும் காட்டுச்சுரம் என்றொரு நூலும் உருத்திராக்கமான்மியமும் இயற்றினார். மருத்துவச் செய்தியை வெண்பா, விருத்தம், அகவல்

எழுதினேன். பிற்காலத்தில் இரு பெயர்களும் இணைந்து 'காசி ஆனந்தன்' ஆயிற்று. - தை 1995 இளைஞன் நேர்காணல்.

தமிழ் ஈழத்தில் தேனாடு என்று அழைக்கப்படும் மட்டக் களப்பில் நாவற் குடா என்னும் ஊரில் பிறந்தவர் இவர். இவர் பிறந்த நாள் 4.4.1938. பன்னிரண்டாம் அகவையிலேயே பாடத் தொடங்கிய சிறுப் பெரும் பாவலர் இவர் 1957இல் சிங்கள 'சிறீ' எழுத்தைத் தார்மை கொண்டழித்துச் 'சிறையாளி'யாகி காசநோயாளியாக மீண்டவர். ஐயாண்டுகள் சிறையும் ஐயாண்டுகள் மருத்துவமனையும் புகலிடமாக நேர்ந்தவர். ஐயாண்டுகள் பட்டப்படிப்புக் கெனத் தமிழகம் நண்ணினார். இலங்கையில் பணியாற்றினார். 1972இல் இலங்கை குடியரசாக அறிவித்த காலையில் பதவியைத் துறந்து போராடிச் சிறை புகுந்த அரிமா இவர். தம் குடும்பமே ஈகக் குடும்பமாய் அமைந்தவர். இவர் தம் திருமணம் 1979 இல் நிகழ்ந்தது துணைவியார் சரோசினியார். ஒரே மகளார் அமுத நிலா.

தமிழ் ஈழம் இவரை ஈன்றது தமிழகம் தமிழூட்டி வளர்த்தது தமிழுலகம் அவரால் பயன் கொள்கிறது. "ஈழத் தமிழன் தன் தளையறுக்க வீறு கொண்டு பாடிய உணர்ச்சிப் பாவலர், தமிழினத் தின் சொத்து. 'உயிர் தமிழுக்கு' என்பது ஆனந்தனார் பாடல் தொகுப்பின் மணிமுடி.

"என் நாட்டையும் விடுதலை உணர்வையும் ஒருபோதும் இழக்க மாட்டேன்."

"நெருப்பைத் தமிழீழத்தாய் கருப்பை ஆக்கினாள்.

பாவலர் வரிகள் இவை

நூல்கள் : கவிதைத் தொகுதிகள்

"தமிழனா தமிங்கிலனா" முதலியன

1.11.1990

## மு. கார்த்திகேயப் புலவர் (1824-1898)

யாழ்ப்பாணத்துக் காரைத்தீவினர். தந்தையார் முருகேசையர். சூரபன்மன் நாடகம், சந்திரவண்ணன் நாடகம், திக்கைத் திரிபந்தாதி. கிறித்துமத குடாரம், திருத்தில்லைப் பல்சந்தமாலை, வண்ணைத் திரிபந்தாதி, திருப்போசை வெண்பா, முதலியன இவர் நூல்களுள் சில.

இவர் தம் தந்தையாரிடம் வடமொழியும், சண்முக உபாத்தியாயர் என்பவரிடம் தமிழும் கற்றார். பின்னர் இருபாலைச் சேனாதிராய முதலியாரிடமும் பயின்றார்.

இவர் தந்தையார் தன்னையமகவந்தாதி பாடத் தொடங்கி அதனை முடிக்குமுன்னர் 1830இல் இயற்கை எய்தினாராக, அவர்



உடுப்பிட்டி சிவசம்புப்புலவர், பொன்னம்பலம் பிள்ளை ஆயோரிடம் தமிழ் கற்றார். இவர் தமையனார் கணபதிப் பிள்ளை யிடம் வடமொழி பயின்றார். வண்ணார் பண்ணை இந்துக் கல்லூரி யில் ஆசிரியராகப் பணியாற்றினார். சாலிவாகன ஆண்டு 1848இல் இவ்வுலக வாழ்வு நீத்தார்.

## குமாரசாமி முதலியார் (1791-1874)

உடுப்பிட்டியைச் சேர்ந்த வல்லுவெட்டி யூரினர். அருளம்பலக் கோவை, இசைப் பாடற்கோவை, இந்திரகுமாரன் நாடகம், நல்லைக் கலித்துறை, கந்தவனநாதர் ஊஞ்சல் முதலியவற்றை இயற்றினார். இவர் பாடல்கள் குமாரசாமி முதலியார் கவித்திரட்டு என்னும் பெயருடன் வெளியிடப்பட்டன. (வல்வை. 1887) இவர் உவைமன் கதிரைவேற் பிள்ளையின் தந்தையார். இவர் தாய்மாமனாராகிய முத்துக் குமார முதலியாரிடம் கல்வி கற்றார். ஊர்காவல் துறையில் நடுவராக இருந்தவரும், மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடாகிய தமிழகராதியின் ஆசிரியராக இருந்தவருமாகிய கதிரைவேற்பிள்ளை இவர்தம் இரண்டாம் மகனார் ஆவர். இவர் தந்தையார் பெயர் சந்திர சேகர மாப்பாண முதலியார். தாயார் பெயர் வள்ளியம்மை.

## குமாரசாமி முதலியார் (19ஆம் நூற்றாண்டு)

யாழ்ப்பாணம் வல்லுவெட்டியினர். தந்தையார் கதிர்காம பூபதி முதலியார்.

இவர் இயற்றிய நூல்கள்; அருளம்பலக்கோவை, திருவிற் சுப்பிரமணியர் பதிகம், மூளாய்ச் சித்தி விநாயகர் ஊஞ்சல், நல்லைக் கலித்துறை, கந்தவனநாதர் ஊஞ்சல், இந்திரகுமார நாடகம் முதலியன.

## குமாரசிங்க முதலியார் (19ஆம் நூற்றாண்டு)

இவர் யாழ்ப்பாணத்து மாந்தோட்ட 'நாவற்குழி' என்னும் ஊரினர்.

1800இல் அரசு விதித்த அணிகல வரியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தமையால் சிறைத்தண்டனை பெற்றவர். இவர் செய்த பாடல்கள் மாந்தோட்டப் பகுதிக் கத்தோலிக்கக் கோயில்களில் பாடப்படு கின்றன.

## க.சி. குலரத்தினம்

தமிழ்ப்புலவர்கள் அறிஞர்கள் சான்றோர்கள் வரலாற்றை, சைவம் வளர்த்த சான்றோர், செந்தமிழ் வளர்த்த செம்மல்கள், தமிழ் தந்த தாதாக்கள் என்னும் நூல்களாக எழுதியவர். பண்டிதமணி கலாநிதி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் மாணவர்.

## கவிராசர் (18ஆம் நூற்றாண்டு)

இவர் திரிகோண மலையினர். கோணேசர் கல்வெட்டைப் பாட்டாலும் உரையாலும் இயற்றியவர். பண்டிதராசர் இயற்றிய கோணாசல புராணத்திற்குச் சிறப்புப் பாயிரம் வழங்கியவர். கவிராச வரோதயன் எனவும் இவர் வழங்கப்பட்டார்.

## கனகசபாபதி ஐயர்

யாழ்ப்பாணத்து நல்லூரினர். இவர் தந்தையார் வேங்கட சுப்பையர். சொற்பொழிவாற்றுதலில் வல்லார் இவர். ஈழத்திலேயன்றி இரங்கோன் சிங்கப்பூர் சைகோன் பினாங்கு முதலிய நாடுகளிலும் புராணம், சமயம் குறித்து வாழ்நாளெல்லாம் பொழிவு செய்து வளமான வாழ்வு பெற்றவர். வண்ணம் பாடுதலில் வல்லாராகவும் விளங்கினார். 'பலவகை வண்ணப் பாராவாரம்' என்னும் சிறப்புப் பெற்றார். கந்தபுராணசாரம் முதலிய நூல்களும் இயற்றினார்.

## வி. கனகசபைப்பிள்ளை (1855-1906)

யாழ்ப்பாணம் மல்லாகத்தினர். இவர் தந்தையார் விசுவநாத பிள்ளை. தமிழரின் பழம் பெருமையை உலகவர் அறியுமாறு, 'ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட பழந்தமிழர்' என்னும் ஆய்வு நூலை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டவர். களவழி நாற்பது, கலிங்கத்துப் பரணி, விக்கிரம சோழன் உலா என்னும் நூல்களை ஆங்கிலத்தில் பெயர்த்தவர். சென்னையில் அஞ்சலக உயர்நிலை மேற்பார்வையாளராகப் பணியாற்றியவர்.

ஏடுகள் தொகுத்தலில் ஆர்வலர். இவர் தொகுத்த ஏடுகள் உ.வே. சாமிநாத ஐயர்க்கு உதவியாயின. வரலாற்றுக் குறிப்பும் இவர் உதவினார் என்பது புறநானூற்றுப் பதிப்பில் புலப்படுகின்றது. The Indian Antiquary என்னும் ஆங்கிலத்திங்கள் இதழில் தமிழ் வரலாறு குறித்துப் பல கட்டுரைகள் வரைந்தார்.

மதராஸ் ரெவ்யூ என்னும் ஆங்கில இதழில் எழுதியவையே 'The Tamils 1800 years ago' என்னும் நூலாக வெளிவந்தது. இவர் இயற்றிய இந்நூலைக்கற்ற சிமித் என்பார், 'இந்திய வரலாறு **தென்னிந்தியாவில் இருந்து தொடங்கி எழுதப் பெறாத வரையில் நிறைவு பெற்றது ஆகாது**' என்றார்.

## கனகசபைப் புலவர் (1826-1873)

இவர் அளவெட்டி என்னும் ஊரினர். வட்டுக்கோட்டை கலாசாலையில் பயின்றவர். கிறித்தவ சமயம் சார்ந்தவர். இவர் இயற்றிய திருவாக்குப் புராணம் 1751 பாடல்களையுடையது. கிறித்தவர்களால் பெரிதும் பாராட்டப்படுவது. மேலும், அழகர்சாமி மடல், ஒரு சொற் பலபொருள் நிகண்டு என்பவற்றையும் இயற்றினார்.



யாழ்ப்பாணக் கச்சேரி முதன்மை முதலியாராகவும், மட்டக் களப்புக் கச்சேரி முதலியாராகவும் தேசாதிபதியின் தமிழ் முதலியா ராகவும் பதவி பெற்றவர்.

இவர் பாடிய நூல் வட திருமுல்லைவாயில் மும்மணிக்கோவை இவர் தந்தையார் திருச்சிற்றம்பலம்பிள்ளை; தாயார் மாணிக்க வல்லியார்.

கைலாச பிள்ளையும் மற்றையிரு புலவர்களும் கூடி இயற்றிய தாகும் இக் கோவை. அகவல் வெண்பா கட்டளைக் கலித்துறை ஆகிய மூவகைப் பாக்களால் ஆகிய கோவையில் அகவலைப் பாடியவர். கைலாசப்பிள்ளை. அவ்வகவல்பாவே நனி சிறப்புடையதாகப் பெரும்புலவர்கள் பலர் பாராட்டினர்.

## த. கைலாசபிள்ளை

யாழ்ப்பாணத்து நல்லூரினர் இவர். ஆறுமுக நாவலர் இவர்க்குச் சிறிய தந்தையார். யாழ்ப்பாணத்து நாவலர் வித்தியா சாலையை நன்கனம் நடத்தியவர். சிவஞானசித்தியார் சுபக்கத்தை ஆய்ந்து பதிப்பித்தவர். ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டை வெளிப் படுத்தினவர். தமிழ்ச்சங்கம் ஒன்று நிறுவினார். இந்துசாதனத்தின் ஆசிரியராக இருந்து ஆய்வுக் கட்டுரைகள் பல இயற்றினார்.

## கொஸ்தான் (Kostan)

இவர் மாந்தையுவான் கொஸ்தான் என்பவரின் மகனார். பூதத்தம்பி விலாசம் இயற்றியவர். இது மயிலட்டி நல்லையா பிள்ளையால் அச்சிடப்பட்டது. யாழ். (1888)

இணைக்க: கோசங்டன்

## கோசங் டன் வண. எச். ஆர் (19 ஆம் நூற்றாண்டு)

இவர் மரு. கிறீன் மானிப்பாயில் பணியாற்றிய காலத்தில் வட்டுக்கோட்டைச் செமினரியில் பணியாற்றியவர் Hindu Astronomy என்னும் நூலொன்றை ஆங்கிலத்தில் எழுதினார். பின்பு அதன் மொழிபெயர்ப்பையும் தாமே செய்து 1848 ஆம் ஆண்டிலே வெளியிட்டார்.

'நம்மிடத்தில் படித்து நமக்குத் துணைத் தொழில் செய்கிற வர்கள் தமது சனபாசையிலே பெரும்பாலும் காரியம் பார்க்க வேண்டியவர்கள் ஆகையால் அவர்கள் இந்து சோதி சாத்திரத்தை தன் சுய அணி ரூபங்களில்தானே பயின்றிருக்க வேண்டும்' என்பது அவர் கருத்து.

புலமையர் இவர். 1817இல் கிறித்தவம் சார்ந்து 'உவைமன்' என்னும் பெயர் பூண்டார். எயிசிங்டன் என்பார் செய்த சிவஞான போதம் சிவப்பிரகாசம், தத்துவக் கட்டளை முதலிய நூல்களின் மொழி பெயர்ப்புப் பணிக்கு இவர் உதவியாக இருந்தார். பெர்சிவல் பெயர்த்த விவிலியத் தமிழ்மொழி பெயர்ப்புக்கும் துணை புரிந்தார். 'விடாரிமைரர்' என்னும் ஆங்கில இதழின் ஆசிரியராகவும், கல்லூரி ஆசிரியராகவும், வழக்கறிஞராகவும் விளங்கினார். இலங்காபிமானி என்னும் ஆங்கில இதழும் நடத்தினார். காவல்துறை நீதிபதிப் பதவியும் 'சி.சி.எசு' என்னும் பட்டமும் பெற்றார். இலங்கை வித்தியா பகுதி பாடநூல் அவையின் முதன்மை உறுப்பினர் என்னும் நிலையும் உற்றார்.

## நா. கதிரைவேற்பிள்ளை (1874-1907)

யாழ்ப்பாணத்து மேலைப் புலோலி ஊரினர். தமிழ் வடமொழி ஆகிய இருமொழிப் புலமையர்; நாவன்மையர்; கவனகம் வல்லார்; பன்னூல் ஆசிரியர்; திரு. வி. க.வின் தமிழாசிரியர். 'மாயாவாத துவம்சகோளரி', 'சைவ சித்தாந்த மகா சரபம்' எனப் பாராட்டப் பட்டவர். அருட்பா அருட்பா அன்று மருட்பா' என முழங்கியவர். முறைமன்றம் வரை சென்றவர். கூர்மபுராண விரிவுரை, பழநித்தல புராணவுரை, சைவசந்திரிகை, நைடதவுரை, சைவசித்தாந்தச் சுருக்கம், சிவாலய மகோற்சவ விளக்கம், சுப்பிரமணிய பராக்கிரமம் என்பன இயற்றியவர். இவர் அகராதி ஒன்றும் தொகுத்தார்.

## கந்தப்பிள்ளை. ப. (1766-1812)

இவர் தந்தையார் பரமாநந்தர். நல்லூர் ஆறுமுக நாவலரின் தந்தையார் இவர்.

இராமவிலாசம், கண்டிநாடகம், சந்திரகாச நாடகம், ஏரோது நாடகம், இரத்தினவல்லி நாடகம் முதலியவற்றை இயற்றியவர் கந்தப்பர். இவர் இயற்றிய நாடகங்கள் 21 என்பர். இவர் தொடங்கி முடிக்காமல் விட்ட இரத்தினவல்லி நாடகத்தை இவர் மகனார் ஆறுமுக நாவலர் முடித்தார் என்பர்.

சண்முகச் சட்டம்பி என்பாரிடம் முதலில் கற்ற இவர் பின்னர்க் கூழங்கைத் தம்பிரானிடம் தமிழ் பயின்றார். மருத்துவம் தேர்ந்தார். மெல்லோ பாதிரியாரிடம் உலாந்தா, போர்த்துகீசு பயின்றார். சல்பேட் என்பாரிடம் ஆங்கிலம் பயின்றார். அரசு அலுவல் பதினெட்டு ஆண்டுகள் புரிந்தார்.

இவர்தம் மக்கள் ஆடவர் அறுவர்; மகளிர் அறுவர்; ஆகப் பன்னிருவர். ஆடவருள் இளையவர் ஆறுமுக நாவலர்.

கந்தப்பிள்ளை அறம்பாட வல்லார் என்பர்.



## சதாசிவ ஐயர்

யாழ்ப்பாண ஆரிய திராவிட பாசாபி விருத்திச் சங்கச் செயலாளராகப் பணி செய்தவர் இவர். மட்டக்களப்புப் பகுதியில் வழங்கும் நாட்டுப் பாடல்களைத் தொகுத்து வசந்தன் கவித்திரட்டு என்னும் பெயருடன் வெளியிட்டார். தேவி தோத்திர மஞ்சரி என்னும் செய்யுள் நூலை மொழி பெயர்த்தார்.

## சதாசிவ பண்டிதர் (19ஆம் நூற்றாண்டு)

யாழ்ப்பாணத்து நாச்சியார் கோயிலில் பிறந்தவர். இவர் வண்ணை அந்தாதி, வண்ணை நகரூஞ்சல், சிங்கை நகரந்தாதி முதலிய வற்றை இயற்றினார் இவை 1887இல் வெளிவந்தன.

## அ. சதாசிவம் பிள்ளை (1820-1896)

யாழ்ப்பாணத்து மானிப்பாயைச் சேர்ந்தவர் இவர். ஆங்கிலம் தமிழ் ஆகிய இருமொழிப் புலமையர். உதயதாரகை இதழாசிரியர்; பாவலர் சரித்திர தீபகம், வெல்லையந்தாதி, திருச்சதகம், நன்னெறிமாலை, நன்னெறிக் கதாசங்கிரகம் முதலியன இவர் இயற்றிய நூல்கள். வானசாத்திரம் என்றொரு நூலும் இயற்றினார். (1861) உரிச்சொல் நிகண்டைப் பதிப்பித்தார். (1889)

பாவலர் சரித்திர தீபகம், சைமன் காசிச் செட்டி செய்த தமிழ்ப்புலவர் என்னும் நூலின் மொழிப்பெயர்ப்பாக உள்ளது. கிறித்தவம் சார்ந்த இவர் பெயர் ஆணல் என்பது (Arnold).

## சந்திரசேகர பண்டிதர் (19ஆம் நூற்றாண்டு)

உடுவில் என்னும் ஊரினர். சதுரகராதியை அடுத்துவந்த அகராதி யாழ்ப்பாண அகராதி என்றும் மானிப்பாய் அகராதி என்றும் சொல்லப்படும் பேரகராதியேயாகும். இதனை ஆக்குதற்குப் பெரிதும் உழைத்தவர் இச் சந்திரசேகர பண்டிதர் ஆவர்.

## சந்திரசேகர பண்டிதர் (19ஆம் நூற்றாண்டு)

யாழ்ப்பாணத்து நல்லூரில் தோன்றியவர். இவர், நல்லூர்க் கந்தசுவாமி மீது ஒரு கிள்ளை விடு தூது பாடியவர். உடுவில் சந்திரசேகர பண்டிதர் இவரின் வேறானவர்.

## சு. சபாபதி நாவலர் (1843-1903)

யாழ்ப்பாணத்துக் கோப்பாய் என்னும் ஊரினர். இவர் தந்தையார் சுயம்பு நாதபிள்ளை, தாயார் தெய்வயானை.

வடகோவை சகநாதையர், நீர்வேலி சங்கரபண்டிதர், ஆறுமுக நாவலர், வித்துவசிரோமணி பொன்னம்பலம் பிள்ளை ஆகியோ ரிடம் பயின்றவர். ஆங்கிலம் கற்றவர். நெடிய காலம் சென்னை

# ௬. ஈழப் புலமையர் அகர நிரல்

## அகிலேச பிள்ளை (1853 -1910)

திருக்கோண மலையினர். இவர் தந்தையார் அளகைக்கோன் வேலுப்பிள்ளை. இவர், கந்தசாமி கலிவெண்பா, நெஞ்சறிமாலை, விசாலாட்சி விருத்தம் முதலிய 21 நூல்களை இயற்றியவர். பதிப்பாசிரியராகவும் விளங்கியவர், திருக்கரசைப் புராணம், வசந்தன் சிந்து, வேலாயுதசாமி காதல் முதலியவை அவற்றுள் சில.

தமிழ் வளர்ச்சி, சைவ வளர்ச்சி கருதிய இவர், ஆசிரியராகவும் தலைமையாசிரியராகவும் பணியாற்றினார். சுன்னாகம் அ.குமாரசாமிப் புலவரால் மதிக்கப்பட்டவர் இவர்.

## அந்தகக் கவி வீரராகவர் (17ஆம் நூற்றாண்டு)

தொண்டை நாட்டினராகிய இவர் ஈழநாடு சென்று பரராச சிங்கம் என்னும் மன்னனைக் கண்டு அவன் வியக்கத் தக்க பாடல்களை இயற்றிப் பரிசில் பெற்று மீண்டவர்.

## அந்தோணிக்குட்டி (18ஆம் நூற்றாண்டு)

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவர். கிறிஸ்து சமய கீர்த்தனம் என்னும் பாடல்கள் இயற்றியவர். இவர் தமிழ்நாட்டு மணற்பாறை யில் பிறந்தவர். வீரமாமுனிவர் காலத்தவர்.

## அப்புக்குட்டி ஐயர் (1797- )

யாழ்ப்பாணத்து நல்லூரில் பிறந்தவர். நல்லூர் சுப்பிரமணியர் பிள்ளைத்தமிழ், சூதுபுராணம் என்னும் நூல்களையும் தனிப் பாடல்கள் பலவற்றையும் இயற்றியவர். வடமொழிப் புலமையும் பெற்றவர்.

## அம்பலவாண நாவலர் (20ஆம் நூற்றாண்டு)

யாழ்ப்பாணத்து வட்டுக் கோட்டையினர். இவர் தந்தையார் ஆறுமுகம் பிள்ளை. தாயார் சுந்தரவல்லியம்மை. இவர் தமிழ் வளர்ச்சி சைவம் பரப்பல் இரண்டையும் மேற்கொண்டவர். சிறந்த சொற்பொழிவாளர். சற்குருமணிமாலை, பெரிய புராண பாடியம், பிரமதருக்கத்தவம். அருணாசல மான்மியம், திருச்சுழியற் புராணம், சண்முக சடாட்சரப் பதிகம் முதலியவற்றைப் பதிப்பித்தவர். தமிழ்



ஆங்கிலம் வடமொழி ஆகிய மும்மொழிப் புலமையர். நெல்லை யிலும் தில்லையிலும் திருமடங்கள் எழுப்பியவர். திருவாவடுதுறை ஆதீன அம்பலவாண தேசிகரால் **'நாவலர்'** விருது வழங்கப் பெற்றவர்.

## அம்பலவாண பண்டிதர் (1814 -1879)

யாழ்ப்பாணத்தில் கோப்பாய் என்னும் ஊரில் பிறந்தவர். இவர் தந்தையார் அருளம்பல முதலியார். இவர் சேனாதிராய முதலியா ரிடம் பயின்றார். **சேனாதிராயர்** இயற்றிய நல்லை வெண்பா, நீராவிக் கலிவெண்பா முதலியவற்றை அச்சிட்டார்.

## அம்பிகை பாகப்புலவர் (1854-1904)

இவர் இணுவில் என்னும் ஊரில் தோன்றியவர். இணுவை அந்தாதி இயற்றியவர்; சூளாமணி உரைநடை எழுதியவர். சி.வை. தாமோதரம் பிள்ளை செய்த தமிழ்த் தொண்டுக்குத் துணைபுரிந்தவர்.

இணுவில் நடராசையர், ஆறுமுக நாவலர் ஆகியோரிடம் கல்வி பயின்றவர்.

தணிகைப் புராணத்திற்கு நகரப் படலம் வரை உரை எழுதினவர். வித்தியாசாலை ஒன்றை இணுவில் நிறுவித் தமிழ்த் தொண்டு புரிந்தவர். கல்வி கற்பிப்பதில் தேர்ச்சி மிக்கவர்.

## அம்பிகை பாகன்

மரு கிறீன் வரலாற்றை அரும்பாடுபட்டு அருமையாக எழுதியவர் 'அம்பி' என்னும் அம்பிகைபாகன். இவர் இலங்கை அறிஞர்; ஓய்வு பெற்று பாப்பாநியுகிளித்தீவில் தொடர் கல்வித் துறையில் பணியாற்றி வருபவர். 'தமிழ்மணி' : 'பாவலர்' என்னும் பெருமையர்.

"நம்மக்களுக்குத் தமிழ்மொழி மீதுள்ள நம்பிக்கையிலும் பார்க்க அமரிக்க நாட்டவரான கிறீன் வைத்தியருக்கு அந்தக் காலத்திலேயே (150 ஆண்டுகளுக்கு முன்னேயே) கூடிய நம்பிக்கை இருந்ததைக் கண்டு எமது சமுதாயமே வெட்கப்படல் வேண்டும் என்று வருந்துகிறார் அம்பி.

அந்நியர் ஆட்சியிலே ஆங்கில மொழியறிவு பெற்று பதவி களும் பட்டங்களும் தேடுவதில் நம்மவர் மயங்கி நிற்க, பிறநாட்டவர் தமிழ்ப் பற்றுடன் செயல் புரிந்தமை உண்மையிலேயே அசாதாரணச் செயலாகும். தேசியப் பற்றுக் குன்றி அந்நிய நடை உடை பாவனை களை நம்மவர் நாகரிகமென ஏற்ற காலை தேசியப் பற்றையுமே அவ்வமரிக்கர் தூண்டமுயன்றார். அன்று ஆங்கில அறிவு பெற்றுப் பணமும் பதவியும் வகித்துச் சுகவாழ்வு அநுபவித்தவர்களின் வழிவழி வந்தவர்கள் இன்றும் ஆங்கிலமொன்றே அறிவுப் பரிவர்த்தனை

*1972 மே 22 ஆம் நாள் மூதறிஞர் செல்வநாயகத்தின் தலைமையில் தமிழ் ஈழநாட்டினத்தின் இறைமை தமிழ் ஈழமக்களிடம் வந்தடைந்தது.*

## தமிழதேவி

*தமிழ்நாட்டில் பாண்டிமாதேவி, சோழமாதேவி, சேரமா தேவி எனும் அரசியர் இருந்தார்கள். ஆனால், தமிழ் நாட்டுக்கு இல்லாத பெருமை என்னவென்றால் இலங்கையில் 'தமிழதேவி' என்னும் பெயரிலேயே ஒரு தமிழரசி இருந்தாள் என்று கூறப்படும் வரலாற்றுச் செய்தியாகும்.*

*காசிஆனந்தன்.*

*தமிழனா தமிங்கிலனா? (20)*

## விளம்பரப் பலகை

*தமிழீழத்தில் கல்வித்துறை, தமிழ்மொழிக் காப்புத்துறை ஆகிய இரு துறைகளுக்கும் பொறுப்பாக இப்போது இருப்பவர் **இளங்குமரன்**. யாழ்ப்பாணத்தெருக்கள்தோறும் முன்பு ஆங்கிலத்திலும் வடமொழியிலும் இருந்த பெயர்ப்பலகைகள் இன்று தனித் தமிழாய்த் திகழ்கின்றன. (1995)*

*தமிழ்நாட்டில் இருபத்தைந்து ஆண்டுகள் ஆட்சி புரிந்த திராவிட இயக்கத்தினரால் செய்ய முடியாமல் போன இப்பணியை மிகக்குறுகிய காலத்தில் இளங்குமரன் தமிழீழத்தில் செய்து காட்டியிருக்கிறார்.* *- தமிழனா தமிங்கிலனா? (70)*

## வாழும் வரலாறு

***காந்தள் மலர்***

*காந்தள் அரியதோர் மலர். அது குருதிக் காந்தள், செங்காந்தள் எனவும் அதன் வண்ணச் சிறப்புக் கொண்டு வழங்கப்படும். ஐவிரல் போல் இருத்தலால் ஐவிரலிப்பூ எனவும், நாட்டுப் புற மக்களால் கலப்பைப் பூ எனவும் வழங்கப்படும். அதன் தோற்றம் கண்ட உவமைப் பெயர்கள். இவை, பொதுமக்களால் கார்த்திகைப் பூ என வழங்கப்படும். இப்பூ பண்டு தொட்டே முருகனொடு தொடர்பு படுத்தும் மலராக உள்ளது. கார்த்திகை மாதத்தில் மலர்தல் கொண்டும் கார்த்திகையன் எனப்படும் முருகனுடையது என்பது கொண்டும் இவ்வழக்குண்டாயது.*

*குறிஞ்சி பூ, நிலம், திணை என்பவை பெற்றது உண்டு. அவ்வாறே காந்தள் செறிந்த மலை 'காந்தளஞ்சிலம்பு' எனப் படுவதாயிற்று.*

*குறுந்தொகையின் கடவுள் வாழ்த்து முருகனைப்பற்றியது. அவன் வேல் அஞ்சுடர் நெடுவேல் என்றும், சேவலங் கொடியேன் என்றும் சொல்லுதலால், வேலன் என்பதைத் தெளிய அறியலாம்*



விரிவான உரை கண்டார் (1960). தமிழகப் பெரும்புலவர்களொடு மிகத் தொடர்பு கொண்டார். பதிற்றுப் பத்து முதல் பகுதி வெளியீட்டு விழாவில் (1961) 'சங்கநூற் செல்வர்' எனப் பாராட்டும் பணமுடிப்பும் பெற்றார். அதன் இரண்டாம் பகுதி வெளியீட்டில் 'பண்டிதமணி' எனச் சிறப்பிக்கப் பட்டார். திருவாசகத்திற்கும் உரைகண்டார்.

இவர் இயற்கை எய்திய போது,

*"நாவலர்**செந் தமிழ்வசன நடையினால்***
***இசைபெற்றார்; யாழ்நூல் ஈந்தே***
***பூவுலகில் சுவாமி**விபு லானந்தர்*
***புகழ்படைத்தார்; பொலியும் சங்கப்***
***பாவுலகில்** பதிற்றுப்பத் துரைகண்டே*
*சீருளம் பலவா **நீயும்***
***பூவுலவு நாமகளின் புதல்வனெனும்***
***உரிமைபெறு தகுதி பூண்டாய்"***

என்பது, புலவர்மணி **பெரியதம்பிப் பிள்ளை** இயற்றிய இரங்கல் பாடல்களுள் ஒன்று.

## அழக சுந்தர தேசிகர் (1873-1941)

'பிரான்சிசு கிங்சுபரி' என்னும் பெயரை இவ்வாறு மாற்றிக் கொண்டவர். பழம்பதிப்புப் பெருமை சி.வை. தாமோதரம் பிள்ளை இவர் தந்தையார்.

கொழும்புப் பல்கலைக்கழகக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணிபுரிந்தவர். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதி ஆசிரியர் குழுவில் உறுப்பினராக இருந்தவர்.

இராமன் கதை, பாண்டவர் கதை, சந்திரகாசம், ஏசு வரலாறு அகப்பொருட் குறள் முதலிய நூல்களை யாத்தவர்.

## ஆறுமுகத் தம்பிரான் (19ஆம் நூற்றாண்டு)

யாழ்ப்பாணப் புலவராகிய இவர் தருமபுர ஆதீனப் புலவரானார். பின் மடத்துத் தம்பிரானாகி கதிர்காமம் முதல் செகந்நாதம் வரை, யாத்திரை செய்தார். 1836இல் கிறித்துவ மதம் தழுவினார். அஞ்ஞானக் கும்மி இயற்றினார். இவர் தம்பிரானாக இருந்த காலத்துப் பெரிய புராணத்துக்குச் சிறந்த உரை இயற்றினார். இது 1885இல் அச்சிடப்பட்டது.

## ஆறுமுக நாவலர் (1822 - 1879)

பழந்தமிழ் நூல் பதிப்புக்குக் கால்கோள் செய்தவர்; பிழையிலாப் பெருமைப் பதிப்பு இவர் பதிப்பெனத் தமிழ் உலகில் ஒரோ ஒருவராக நின்றவர். சிவனிய **ஐந்தாங் குரவ**ரென ஆர்வலர்

வேலைகளைச் செய்து கொண்டிருந்தவர்களையெல்லாம்-திடீரென்று தாக்கியிருக்கின்றனர்" என்று கூறும் அறிக்கை, திரு. **பேரின்பநாயகம், பொன்னையா விநாயக மூர்த்தி**, தவராஜா முதலியவர்களைத் தாக்கியதையும் ஊர்திகள் கடைகள் ஆகிய வற்றைப் பாழ்பத்தியதையும் வெளியிடங்களிலும் மேலும் சில நாள்களிலும் தொடர்ந்து கொடுமை செய்ததையும் குறிப்பிடுகின்றது.

ஓர் அதிகாரி, 'முட்டாள்களே வானுக்குள் ஏறுங்கள்' என்று உத்தரவிட்ட பிறகும் பொலிசார் அட்டூழியத்தை விடவில்லை என்ற சான்றையும் **(இமானுவேல் இராஜசிம்மம்)** பதிவு செய்துள்ளது அறிக்கை.

**"ஒரு பாவமும் அறியாத பலர் காயமடைந்தும் பொருள் இழந்தும் உயிர் இழந்தும் அல்லலுற்றது அந்தப் பொலிஸ் அதிகாரியின் முற்றும் பிழையான மதியற்ற தீர்மானத்தின் சங்கிலித் தொடர் நிகழ்ச்சிகளேயாகும்** என்று நாங்கள் அபிப்ராயப் படுகிறோம்." என்கின்றனர் நடுவர்கள்.

நான்காம் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று பொலிசாரின் தாக்குதலில் பலியான ஒன்பதின்மர்.

**சி.நந்தகுமார், வே. கேசவராசன், ப. சரவணபவன், இ. சிவானந்தம், வ. யோகநாதன், இ. தேவரட்ணம், பி. சிக்மாறிலிங்கம், சி. ஆறுமுகம், சி. பொன்னுத்துரை.**

## யாழ் பொது நூலகம்

யாழ்மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலுக்குப் பாதுகாப்பாகத் தமிழே தெரியாத 400-க்கு மேற்பட்ட போலீசார் தென் இலங்கையிலிருந்து வந்திருந்தனர். அதே போலீசார்தான் யாழ்ப்பாணத்தில் இருந்த பொது நூலகத்திற்குத் தீயிட்டனர்.

இந்நூலகம், போலீசுநிலையத்தில் இருந்து 700 கச தூரத்தில் தான் இருந்தது. 400 சிங்களப் போலீசார்தான் இந்தச் சாதனையைச் செய்தனர். அதிலும் தலைமைத் தளபதி வீர துங்கா யாழ்ப்பாணத்தில் இருக்கும் போதே இப்படியொரு நிகழ்ச்சி.

நூலகம் எரிகின்றது என்ற செய்தி கிடைத்ததும் வண தாவீது அடிகள் (சுவாமி ஞானப்பிரகாசரின் மாணவர்) ஒப்பியல் அறிஞர் மாரடைப்பால் உயிரிழந்த காட்சியை மறக்க முடியாது. 97000 புத்தகங்களின் பெறுமதி அவருக்குத் தானே தெரியும்?

இரண்டாம் உலகப்பெரும்போர் நடந்த போது இட்லரின் விமானப் படை பிரிட்டனின் மீது குண்டுகளை வீசச் சென்றது. அவர்கள் எந்தக் காரணம் கொண்டும் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தை மட்டும் குண்டுவீசி அழிக்கக் கூடாது என்று ஆணை



## இரகுநாதையர்

யாழ்ப்பாணத்தவர் இவர். போசராச பண்டிதர் செய்த சரசோதி மாலையைப் பதிப்பித்தவர் (1892). சோதிடம் வல்லார்.

## இராமசாமி ஐயர்

வட்டுக் கோட்டையில் தோன்றியவர் இவர். கதிரைமலைக் கந்தசாமி மேல் கீர்த்தனங்கள் பாடியவர். அல்லி நாடகமும் இயற்றினார்.

## இராமநாதன் சேர் பொன்னம்பலம் (1851 -1930)

இவர் சேர்.பொன். அருணாசலம் உடன்பிறந்தார். பகவத் கீதையைத் தமிழில் மொழி பெயர்த்து அதற்குச் சைவசித்தாந்தத்தைத் தழுவி விரிவுரையும் எழுதினார். செந்தமிழ் இலக்கணம் என்றொரு நூலும் வெளியிட்டார். இவர் வரலாற்றைச் சாவகச்சேரி ச.பொன்னம்பலப் பிள்ளை **'இராமநாத மான்மியம்'** எனச் செய்யுள் நூலாக இயற்றியுள்ளார். இவர் ஆங்கிலத்தில் 'மேல்திசை நாடுகளின் ஆன்மவித்தை' என்னும் நூலும் இயற்றினார். திருக்குறள் பாயிரத்திற்கு **'இராமநாதீயம்'** என்னும் விரிவுரை இயற்றினார்.

இவர் கொழும்பில் பிறந்தவர். கொழும்பிலும் சென்னையிலும் கல்வி கற்றார். இங்கிலாந்து சட்டமன்றத்தார், பாரிசுடர் தேர்வு இல்லாமலே அப்பட்டம் வழங்கினர். யாழ்ப்பாணத்தில் மகளிர்க்கு இராமநாதன் கல்லூரியும் ஆடவர்க்கு பரமேசுவரன் கல்லூரியும் நிறுவியவர். அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய வெளிநாடுகள் சென்று பல்வேறு பல்கலைக்கழகங்களில் உரையாற்றினார். 1930இல் இலங்கைத் தமிழர் உரிமையைக் காப்பதற்காக இங்கிலாந்து சென்றார்.

## இராமலிங்கப் பிள்ளை ( - 1885)

சுதுமலை என்னும் ஊரினர். இவர், நவாலியூர் முத்துக் குமாரப் பிள்ளையினிடம் பயின்றவர். சங்களை அந்தாதி, மாணிக்க வாசகர் விலாசம், நளச்சக்கரவர்த்தி விலாசம் முதலியவற்றை இயற்றியவர்.

## இராமலிங்கையர் (19ஆம் நூற்றாண்டு)

யாழ்ப்பாணத்து நல்லூரில் வாழ்ந்தவர். சந்தான தீபிகை என்னும் சோதிட நூல் செய்தவர். சரசோதி மாலை என்னும் நூலைப் பதிப்பித்தவர். பழமொழிப் பிரபந்தம் என்றொரு நூலும் செய்தார்.

## இருபாலைச் செட்டியார் (19ஆம் நூற்றாண்டு)

யாழ்ப்பாணத்து இருபாலையில் வாழ்ந்தவர். மருத்துவப் புலமையாளர். இவர் செய்த நூல்கள் வைத்தியவிளக்கம் சரக்குச் சுத்தி என்பன. இவற்றை ஏழாலை மருத்துவர் பொன்னையா அச்சிட்டார்.

ஆற்றாமற் பார்த்துக் கொள்வதே பொலிஸின் நோக்கம் என்பது சாட்சியங்களில் இருந்து புலனாகிறது. ஜனார்த்தனன் மகாநாட்டுப் பிரதிநிதி அல்ல; அவரைச் சொற்பெருக்காற்றச் செய்வது அமைப்பாளரின் நோக்கமும் அல்ல. அந்தக் கட்டுப்பாட்டோடு தான் பொலிஸார் கூட்டத்திற்கு அனுமதி அளித்திருந்தனர்.

* * *

கூட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கும் சமயம் **ஜனார்த்தனன்** பல ஆர்வலர்களுடன் கைதட்டல்களுக்கிடையில் அங்கு வந்து அமர்ந்தார். வழக்கறிஞரும் முன்னாள் பாராளுமன்ற அங்கத்தவரு மான திரு. **அமிர்தலிங்கம்** அவருக்கு மாலை அணிந்தார். ஜனார்த்தனன் மேடைக்கு வந்து இரண்டு மூன்று நிமிடங்களில் கலாநிதி **வித்தியானந்தன்** அவரை மேடையில் இருந்து இறங்கிக் கொள்ளுமாறு வேண்டிக்கொண்டபடி அவர் இறங்கிவிட்டார்.

* * *

பிரதிநிதிகளில் முதல் பேச்சாளர் இந்தியாவில் இருந்து வந்திருந்த பிரபல தமிழ்ப் புலவரான கலாநிதி நயினா முகமது பேசிக் கொண்டிருக்கும் பொழுது, ரீகல் படமாளிகைப் பக்கம் இருந்த மக்கள் மத்தியில் சிறிது அமளி ஏற்பட்டது. அது யாழ்ப்பாண பொலிஸ் நிலையப்பக்கமாகும்.

அந்தப் பக்கக் கடைசியில் மக்கள் எழுந்துநகர ஆரம்பித்தனர். ‘அமைதியாய் இருங்கள்’ என்று கலாநிதி நயினாமுகமது கேட்டுக் கொண்டார். அச்சமயம் ஒரு ஜீப்பும் இரும்புத் தொப்பி அணிந்த ஆயுதம் தாங்கிய பொலிஸ்காரர்களைக் கொண்ட ஒரு டிரக்கும் கூட்டத்தினரிடையே மெதுவாக முன்னேற முற்பட்டது.

போகப்போக கூட்டம் மிக நெருக்கமாயிருந்ததால், ‘டிரக்’ வண்டி மேலே நகரமுடியவில்லை. உடனே பொலிஸ்காரர்கள் வாகனங்களில் இருந்து இறங்கித் தங்கள் பாதையில் நின்றவர்களை யெல்லாம் தாக்க முற்பட்டனர். பிறகு விரிந்து பரவி நின்று கொண்டு தொடர்ந்து கடுமையாகத் தாக்கினர். மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர். அதனால் ஒருபெரிய நெரிசல் ஏற்பட்டு, ஒருவர்மேல் ஒருவராகவும் சைக்கிள் வண்டிகள் மேலும் விழுந்தனர்.

பொலிஸ் தாக்குதலில் இருந்து தப்பிக்கச் சிலர் அகழிக் குள்ளும் குதித்தனர். கண்ணீர்ப் புகையும் துப்பாக்கி வெடிகளும் திகிலை அதிகப்படுத்தின. பலர் புகையில் தத்தளித்தனர். மேடை மீதிருந்த கலாநிதி வித்தியானந்தனுக்கும், திரு. ஜேம்ஸ் இரத்தினத் திற்கும் மயக்கம் ஏற்பட்டு வீழ்ந்தனர். துப்பாக்கிச் சூட்டினால் மேலே சென்ற மின்சாரக்கம்பி அறுந்து விழுந்ததை இரும்புக் கிராதிக்குப் பக்கத்தில் நின்ற வழக்கறிஞர் திரு. இராசரத்தினமும் பொதுச்



இவர் பாடலில் வரும் ஒரு தொடர்; உறுதிவாய்ந்து உற்றுழி உதவும் தலைவன் ஒருவனைப் பாராட்டுவது. அது, “நடுங்கு துயர் ஒழித்த நன்னராளன்” என்பது.

## எல்லாளன்

அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு இலங்கையை ஆட்சி புரிந்த தமிழ்மன்னன் எல்லாளன். இவன் காலம் கி.மு. 161-117. யாழ்ப்பாணத்தைத் தலை நகராகக் கொண்டு கி.பி. 1282 இல் ஆரியச் சக்கரவர்த்திகள் என்னும் தமிழ்வேந்தர் இலங்கையை ஆட்சி புரிந்தனர்.

கி.பி. 1619 இல் தமிழரசின் கடைசி வேந்தன் சங்கிலி என்பான் போர்த்துக்கீசியரால் சிறைப்படுத்தப்பட்டு தூக்கில் இடப்பட்டான். (மகாவம்சத்தில் ‘ஏலாரா’ எனப்படுகிறான் எல்லாளன்).

## ஏகாம்பரப்புலவர் (19ஆம் நூற்றாண்டு)

யாழ்ப்பாணம் உடுப்பிட்டியைச் சேர்ந்த வல்லிபட்டித்துறை என்னும் ஊரினர். யாழ்ப்பாணத்து சேனாதிராய முதலியாரிடமும் சென்னை, திருத்தணிகை விசாகப் பெருமாளையரிடமும் கல்வி கற்றவர்.

இவர் கந்தர் அந்தாதிக்கு உரை எழுதியுள்ளார்.

## ஏரம்பையர் (1847 -1914)

யாழ்ப்பாணத்தில் மாதகல் என்னும் ஊரில் தோன்றியவர். தந்தையார் பெயர் சுப்பிரமணிய சாத்திரி.

நீதிசாரம், சேதுபுராண உரைநடை, மிருகாபதி விலாசம், கண்ணப்பர் நாடகம், மனுநீதி கண்ட சோழன் நாடகம், கனா நூல், சிரார்த்த விதி முதலியவற்றை இயற்றியவர். சில ஊஞ்சல் நூல்களும் எழுதினார்.

இவர், தம் தந்தையாரிடம் தமிழும் வடமொழியும் கற்றார். மேலும், சங்கானை வேலுப்பிள்ளை, நல்லூர் சம்பந்தப் புலவர், சங்கர பண்டிதர் ஆகியோரிடமும் கற்றார். ஆறுமுக நாவலரிடம் ஐயங் களைந்தார்.

## கணபதி ஐயர் (18ஆம் நூற்றாண்டு )

காஞ்சிபுரத்தில் இருந்து வட்டுக்கோட்டை சென்று வாழ்ந்தவர். வண்ணை வைத்தியலிங்கக் குறவஞ்சி, மலைய கந்தினி நாடகம், அதிரூபவதி நாடகம் முதலிய நூல்களை இயற்றியவர்.

## கணபதிப் பிள்ளை. க.

பருத்தித்துறை மருத்துவர் க. கந்தசாமிப்பிள்ளை மகனார் இவர். பருத்தித் துறை மா. முத்துக்குமாரசாமிக் குருக்கள் அவர்

6. தெல்லிப்பழை பேதுருப் புலவர் (இவர் இயற்றிய அம்மானை 1647 இல் இயற்றப்பட்டது).

7. தம்பலகமம் ஐ. வீரக்கோன் முதலியார் (சித்திர வேலாயுதர் காதல் இயற்றியவர்)

8. நல்லூர் நா. சந்திரசேகர பண்டிதர் (நல்லூர் கந்தசாமி பிள்ளை விடுதூது இயற்றியவர்).

9. மாதோட்டம் கீத்தாம் பிள்ளை (இவரது எம்பரதோர் நாடகம் 1798 இல் இயற்றப்பட்டது).

10. கெலக் விசுவநாதபிள்ளை (மறைசை அந்தாதிக்குப் பாயிரம் பாடியவர்)

11. தட்சிண கைலாசபுராண ஆசிரியர்.

(சிங்கைச் செகராச சேகரன் இயற்றியது என்றும் பண்டிதராசர் அருளிச் செய்தது என்றும் கூறுவர் பதிப்பு 1887; 1916)

* * *

## திருச்செல்வக் காவியம்

தெல்லிப்பழை பூலோக சிங்க முதலியார் (அருளப்ப நாவலர்) இயற்றியது இக்காவியம்.

24 படலங்களும் 1948 பாடல்களும் கொண்டது

பதிப்பிக்கப்பட்ட ஆண்டு 1896.

அச்சுவேலி ச. தம்பி முத்துப்பிள்ளை தமது ஞானப் பிரகாச யந்திர சாலையில் பதிப்பித்தது.

## ஈழத்தில், புகழ் பூத்த பேராசிரியர்கள் சிலர்;

வி. செல்வநாயகம் 1907-1973

ச. சனஞ்சயராச சிங்கம் 1933-1977

டாக்டர் ஆ. சதாசிவம் 1926-1988

டாக்டர் சு. வித்தியானந்தன் 1924-1989

டாக்டர் தனிநாயக அடிகளார் 1913-1980

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை 1889-1986

முதலியார் குல சபாநாதன் 1908-1986

டாக்டர் க. கைலாசபதி 1933-1982

வித்துவான் நடராசா 1933-1982

தென்புலோலியூர் கணபதிப் பிள்ளை 1933-1982

அங்கையன் வை. அ. கயிலாச நாதன் 1942-1976

கரவைக் கபிலன் செ. கதிர்காமநாதன் 1942-1972



## திணைக்களம்

ஈழத் தமிழர்கள் தங்கள் குழந்தைகளிடம் கூட 'மரியாதையாக' வாருங்கள், சொல்லுங்கள் என்று பேசுகிறார்கள்.

ஏன் இப்படிச் சொல்கிறார்கள்? விளக்கம்:

குழந்தை நம்மிடமிருந்தே பேச்சுப் பழகுகிறது. நாம் 'வா' என்றால் நம்மை அதுவும் 'வா' என்றே அழைக்கிறது. நம் வீட்டுக்கு வரும் மற்றவர்களையும் ஒருமையிலேயே அழைக்கத் தொடங்கி விடுகிறது. நாம் மரியாதைச் சொல்லால் சொன்னால் அதுவும் அப்படியே பேசக் கற்றுக் கொள்கிறது என்கின்றனர். 'ரெஸ்ட் ஹவுஸ்' என்பதை 'வாடிவீடு' என்பதும், 'டிபார்ட்மெண்ட்' என் பதைத் 'திணைக்களம்' என்பதும், 'டிபாசிட்' என்பதைக் 'கட்டுக்காசு' என்பதும் 'மைல்' என்பதைக் 'கட்டை' என்பதும் ஈழத்தமிழர் வழக்கு.

கனக சவுந்தரி இளந்திரையன்
இதழ் : 'சுடர்' 1962.

## பழந்தமிழ்ப் புலவர் உறைவிடம்

"இலங்கை நம் தென்னாட்டோடு தொடர்பு கொண்டிருந்த ஒன்று. பழந்தமிழ்ப் புலவர்கள் உறைந்த இடம் இதுவாய் இருக்குமோ என்று எழுந்த நினைவு என்னைவிட்டு அகலவில்லை."

திரு. வி.க., 'எனது இலங்கைச் செலவு'
20,27.8.1926

### செந்தமிழ் இதழ்வளம்

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் இருந்து வெளிவந்த மாதிகை செந்தமிழ். அதன் முதல் இரண்டு ஆண்டு இதழ்களில் மட்டும் ஈழம் தந்த தமிழ்க் கொடையை ஓர் அளவு கோலாகக் கொள்ளலாம். அரிய ஆய்வுகள் அன்றி அல்லவை இடம் பெறாதது செந்தமிழ். அதன் முதல் இரண்டு ஆண்டுகள் (1903, 1904), இதழ்கள் 24. இவற்றில்,

வி. கனகசபைப்பிள்ளை கட்டுரைகள் 3

அ. குமாரசாமிப் பிள்ளை கட்டுரைகள் 16

ஆ. முத்துத்தம்பி பிள்ளை கட்டுரைகள் 9

சி. கணேசையர் கட்டுரைகள் 3

நா. கதிரைவேற் பிள்ளை கட்டுரைகள் 3

லோரெஞ்சுப் புலவர் ஞானப் பிரகாச தேசிகர் (ஞானப்பிரகாச முனிவர்), கூழங்கையர் ('கூழங்கைத் தம்பிரான் அல்லது கனக சபாபதி யோகி'), பிலிப்பு தெ. மல்லோ மாதோட்டம் குமாரலிங்க முதலியார், வட்டுக் கோட்டை கணபதி ஐயர், தெ. சேனாதிராய முதலியார், நல்லூர் சரவண முத்துப்புலவர், அராலி விசுவநாத சாத்திரியார் ஆகிய பன்னிருவர் ஈழத்தவர்.

* * *

காசிச் செட்டி அவர்கள் இறையனார் கடவுள் அல்லர், மனிதரே என்று தொடங்கி வைத்த ஆட்சேப நெறியிலே வரலாற்றுணர்வுடையோர் இருபதாம் நூற்றாண்டின் விடியல் முதலாகச் செல்ல முயன்றுள்ளனர் என்பது சுட்டத்தக்கது.

* * *

ஈழத்திலே தட்சிண புராணம் முதல் திருக் கேதீச் சுர புராணம் ஈறாகச் செய்யுளில் ஏறக் குறைய நாற்பது புராணங்கள் வரை தோன்றியுள்ளன என்று அறிய முடிகின்றது.

சிதம்பர சபாநாத புராணம் முதல் ஒன்பது புராணங்கள் தமிழ்நாட்டுக் கோயில்களுக்கு ஈழப்புலவர்கள் இயற்றியுள்ளனர்.

"புராணங்களால் சமயத்தின் மேல் அருவருப்பு உண்டாகச் செய்துவிட்டனர். தமிழின் மீது அருவருப்பும் உண்டாகச் செய்து விட்டனர்" என்று கருதுவார் தோன்றினர். ஆனால் ஈழத்தில் புராணம் என்னும் இலக்கிய வடிவத்தின் பொருளை மாற்றி யமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் அச்சுவேலி நீ. காசிநாதப் புலவர் (1796-1854) கோப்பாய் வே. இராமலிங்கம், வண்ணார்பண்ணை சுப்பையர் என்பவராவர்.

நீலகண்டர் என்பாரின் புதல்வர் காசிநாதப் புலவர் 'தால புராணம்' இயற்றினார். இந்நூல் பனங்காய்ப் பாரதம் எனவும் அழைக்கப்பட்டது. அது, "பனைப்பெருமை, அதன் பயன்பற்றிக் கூறுவது" என்பர். அது ஒருவகைக் கேலிப் பாடலாகவும் இருக்கலாம் என்றும் கூறுவர். கோப்பாய், வேலுப்பிள்ளையின் புதல்வராகிய இராமலிங்கம் 'கோட்டுப் புராணம்' இயற்றினார். முறை மன்றம் சென்று வழக்கு நடத்துதல், வாதி, பிரதிவாதி இழப்பு அல்லல், தொல்லை, இருபக்கத்தாரையும் தூண்டிவிட்டுப் பணம் பறிக்கும் 'கோட்டுப் புறாக்கள்', இருபுறமும் கை நீட்டும் நியாய துரந்தரர் இவர்களை இழித்தும் பழித்தும் கூறுவது கோட்டுப் புராணம். "கோர்ட்டுப் புராணமா? கோட்டுப் போட்டவர் புராணமா?" இதுவும் நகையாண்டி இலக்கியம். சுப்பையர் இயற்றிய கனகி புராணப் பாட்டுடைத் தலைவியாகிய கனகி என்பவள் கற்பனைப் பிறவி அல்லள். "வண்ணார் பண்ணைச் சிவன் கோயில் தாசிகளுள்



**"நாட்டிலே ஆளுகின்ற அதிகாரம் இல்லாவிட்டால் - நாட்டிலே வாழுகின்ற பாதுகாப்பே எமக்கு எக்காலும் கிடைக்காது"** என்ற சிந்தனையை அன்றைய நிகழ்ச்சி எமக்கெல்லாம் உருவாக்கியது.

'யாழ்ப்பாணத்து நன்நகரின் கற்பக விருட்சமாம் ஓங்குயர் பனைமரம் போல் வைரம் படைத்த நெஞ்சம் கொண்ட எமது உயிரனைய உடன்பிறப்பு தலைவர் **வன்னிய சிங்கம்** முதுகிலே ஓர் பலமான அடி விழுந்தது. அமைதியோடு, "ஓர் உண்மையான தவசி தவம்புரிகையில் எவ்வாறிருப்பாரோ அவ்வாறே தவசிபோல் இறைவன் புகழ்பாடும் தேவாரப் பதிகங்களைப் பாடிக் கொண் டிருந்தார்.

"தந்தையின் 13, 14 வயது மதிக்கத்தக்க மூத்த செல்வன் **சந்திரஹாசன்** தந்தையின் கண் முன்னாலேயே மிருகத்தனமாகத் தாக்கப்பட்டான். இம்மியும் மனம் இடிந்திடாத நிலையில் தந்தை செல்வா இக்காட்சியைக் கண்டு கொண்ட அமைதி கண்டு நாமனைவருமே பிரமித்து விட்டோம்.

"தலைவர்கள் தொண்டர்கள் ஆகிய அனைவரும் குண்டர்களின் கொடூரத் தாக்குதல்களுக்கு இரையானார்கள். விசேடமாக நண்பர் **அமிர்தலிங்கத்திற்கு** நெற்றி பிளந்த நிலையில் குருதி கொப்பளித்த தென்பதையும், தொடர்ந்தும் பலதடவை அவர்பால் நடத்தப்பட்ட தாக்குதல்களின் விளைவாக அவர் அணிந்திருந்த ஆடைகள் சிவப்பாகிய அக்கோலத்திலேயே - அதாவது இரத்தச் சிவப்பு நிறமாக உருமாறிய ஆடைகளுடனேயே அவர் ஆட்சி மன்றத்தினுட் புகுந்து தனிச் சிங்கள மசோதாவை எதிர்த்து வாதாடிய அஞ்சாத சிங்கம் என்பதையும் இங்கே எக்காலத்திற்குமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

"இலங்கையின் மொழிப்புரட்சிக்கு வித்திட்ட நாளை- இலங்கைத் தமிழரை விடுதலைப் பாதையில் தந்தை செல்வா அழைத்துச் செல்ல வாய்ப்பளித்த நாளை. **ஆனி ஐந்தம் நாளை** நன்றியுள்ள நம் தமிழர் எழுச்சி நாளாக ஆண்டுக்காண்டு கொண்டாடிட வேண்டும்."

இலங்கையில் மொழிப் புரட்சி- வ.ந. நவரத்தினம் பா.உ.

* * *

"மோட்டார் வண்டிகளைப் பதிவு செய்யும் போது அவற்றின் பதிவு எண்களுக்கு முன்னால் 'சிறீ' என்று சிங்களத்தில் எழுதப் படவேண்டும் என்று மோட்டார் வண்டிப் பதிவுச் சட்டத்தில் சிங்கள அரசு - பண்டார நாயகா அரசு - திருத்தம் செய்தது. ஆங்கிலத்தில் வழக்கில் இருந்த முறைக்குப் பதிலாகச் சிங்களம் புகுத்தப்படும்போது

குவைகளும் திறையாகப் பெற்றான். கோணமலையிலும் திரிகூட மலையிலும் பாண்டியர் கயற்கொடி பொறிக்கப்பட்டது. பக். 268.

சடையவர்மன் அரிகேசரி பராக்கிரம பாண்டியன் விசயநகரப் பேரரசர் சார்பிலே இலங்கைப் படையெடுப்பை நடத்தினான்.

***'சிங்கையில் அனுரையில் இராசையில் செண்பையில்***
***விந்தையில் அறந்தையில் முதலையில் வீரையில்***
***... மன்னரை வெந்கண்ட"*** பக். 333

என்பது அவன் மெய்க்கீர்த்தி (1422-1463)

* * *

தென்னாட்டுப் போர்க்களங்களைப் பட்டியலிட்டு ஒட்டு மொத்த ஆய்வு செய்யும் பன்மொழிப்புலவர் கா. அப்பாத் துரையார் நூல் நிறைவில் (பக். 496), "மனித இனத்துக்குள்ளேயே பகைவரைக் காணும் புறப்போர்ப் பண்பு நீக்கித் **தமிழகம் உலகில்** அகப்பகைப் பண்புகளை எதிர்க்கும் அறிவுப் போர் முறைகளை வகுத்து முன்னேற்றம் காண வேண்டும்" என்பது ஆழமாக எண்ணத்தக்க குறிப்பாகும்.

## மேல் முயற்சியும் மீள் முயற்சியும்

பேராசிரிர் **பொ. பூலோகசுந்தரம்** அவர்கள் தந்த ஆய்வு நூல் **'தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெருமுயற்சிகள்'** என்பது அதில் உள்ள குறிப்புகள் சில :

* * *

'ஈழ மண்டலப் புலவர் சரித்திரம்', 'ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம்,' 'இலக்கிய வழி' போன்ற முன்னைய நூல்களிலே இடம் பெறாத செய்திகளைத் தொகுக்க அறிஞர் முன் வந்தனர். "இலங்கையிலே இன்பத்தமிழ்" 'ஈழமும் தமிழும்' என்ன இவ்வழியிலே முன் தோன்றியவை.

* * *

தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி ஆ. சதாசிவம் அவர்களின் தலைமையில் தமிழ்த் துறையின் புதிய பாடத்திட்டத்தை வகுக்க முனைந்தோம். தமிழை முக்கிய பாடமாகக் கொண்டு பயில்பவர்களுக்கு 'ஈழத்தமிழ் இலக்கியம்' என ஒரு பாடத்தை முதன்முதலாக நாங்கள் அளிக்க முன் வந்தோம்.

* * *

ஈழத்தவர் தமிழ் இலக்கியத்திற்குக் குறிப்பிடத்தக்க வேறு அரும்பணிகளையும் ஆற்றியுள்ளனர். 'மானிப்பாய் அகராதி', 'அபிதான கோசம்', 'சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி',



தமிழன் இப்போதுதான் முதல் தடவை வரலாற்றில் தமிழ்காக்க உயிர்க் கொடை தந்தான்."

* * *

95000 நூல்களைக் கொண்ட யாழ்நூலகம் முற்றாகச் சிங்கள வெறியரால் எரிக்கப்பட்டது.

இவற்றின் விளைவுகள் என்ன?

**பழந்தமிழ்ப் புறநானூறு புதுப்பொலிவோடு ஈழத்தில் மெய்ச்சான்றாகத் திகழ்வதாயிற்று**

**அதன் ஒரே ஒரு பொறி :**

***"சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்***
***யாண்டுளனோ என வினவுதி என்மகன்***
***யாண்டுளன் ஆயினும் அறியேன் ஓரும்***
***புலி சேர்ந்து போகிய கல்லளை போல***
***ஈன்ற வயிறோ இதுவே***
***தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே."***

என்பது இது, புறநானூறு 86 ஆம் பாட்டு. பாடியவர் **காவற் பெண்டு** இப்பாடற் பொருள் : "சிறிய வீட்டின் நல்ல தூணைப் பற்றிக் கொண்டு 'உன்மகன் எவ்விடத்துள்ளான்?" என்று வினாவுகின்றாய். என் மகன் எவ்விடத்துள்ளான் எனினும் அறியேன். புலி தங்கிச் சென்ற குகையைப் போல அவனைப் பெற்ற வயிறு இதுவாம். அவன் போர்க்களத்திலே தோன்றுவான்: ஆங்குப் போய்ப்பார்" என்பது. காவல் பெண்டு காட்டிய நாடு காவல் பாட்டின் தூண்டல், என்ன ஆயிற்று? **பொங்கி எழும் புலிப்படையாய்ப் புதுப்புறநானூறு ஈழத்தில் பொலிந்து வீறுகாட்டி வெற்றி சூட்டுவதாயிற்று.**

## தமிழ் என்பது தமிழே

பிரயோக விவேக நூலார், "திரமிளமென்னும் ஆரியச்சொல் தமிழெனத் திரிந்தது" என்று கொண்டாரால் எனின், முதன்மையுடைய இம்மொழியைத் தோற்றிய காலத்து இறைவன் தன் சொல்லால் இதனை வழங்க இதற்குக் குறியீடு தருதல் அன்றிப் பிறபாடைச் சொல்லால் இதற்கு அன்னதோர் பெயரினைத் திரித்து நிறுத்தினான் என்றால் பொருந்தாமையின் அது செல்லாது என மறுக்க.

திராவிடப் பிரகாசிகை.12
சபாபதி நாவலர்.

## தமிழ் ஆட்சி மொழி

இலங்கையை முற்ற முழுதாக ஐரோப்பியர் கைப்பற்றும் வரை கடைசியாகத் தீவை ஆண்டு வந்தவன் தமிழ் மன்னனே ஆவன். விக்கிரம ராச சிம்மன் என்பான் அவன். 1815 ஆம் ஆண்டுவரை

ராசனுக்குச் சனநாதன் என்ற விருதுப்பெயர் இருந்தது. குடியாட்சிக்குத் தற்போது வழங்கும் புதுப்பெயரான ஜனநாயகம் என்ற தொடரை இவ்வழக்கு நினைவூட்டுகிறது.

மாத்தோட்டம் என்ற இலங்கை நகரம் சோழர் காலத்தில் **இராசராசபுரம்** என்று பெயர் பெற்றிருந்தது (கி.பி. 991.) பக்.202.

இராசராசன் காலத்து ஈழப்போரில் ஐந்தாம் மயிந்தன் நாட்டாட்சியைச் சோழரிடம் விட்டுவிட்டு, ரோகண நாட்டு மலைப் பக்கங்களில் சென்று ஓடி ஒளிந்து கொண்டான். அவன் சில ஆண்டுகளுக்குப்பின் வெளி வந்து படைதிரட்டிச் சோழர் ஆட்சியை எதிர்க்க முற்பட்டான். இதன் பயனாக 1017 இல் முதலாம் இராசேந்திரன் மீண்டும் ஈழநாட்டுக்குப் படையெடுத்துச் சென்று போர் தொடுத்தான்.

இத்தடவை சோழர் வெற்றி முன் என்றும் இல்லாத முறையில் நிறைவெற்றியாயிற்று. ஏனெனில் சோழர், ஐந்தாம் மயிந்தனைப் போரில் முறியடித்துச் சிறைப்படுத்தினர். அவனைச் சோழ நாட்டுக்கே அனுப்பிக் காவலிலும் வைத்தனர். அத்துடன் இராசேந்திரன் அவன் முடியையும் அவன் அரசி அணிந்த முடியையும் கைக்கொண்டான். தவிர, முன் முதலாம் பராந்தகன் ஆட்சியில் பாண்டியன் ஈழ அரசனிடம் அடைக்கலமாக வைத்து விட்டுச் சென்ற சுந்தர முடியும் இந்திரன் ஆரமும் கூட இப்போது சோழன் கைவசமாயின. ஈழத்தீவு முழுவதும் இராசராசன் ஆட்சியில் சோழர் ஆட்சியுட் படாதிருந்த ரோகண நாடு உட்பட சோழர் ஆட்சிக்கு உட்பட்டது.

இத்தகைய ஒரு வெற்றியை உளத்தில் கொண்டே இராசராசன் தன் இலங்கைத் தலைநகரைத் தீவின் மைய இடமாகிய பொலனருவா அல்லது சனநாதமங்கலத்தில் தேர்ந்தமைத்தான் என்பது இச்சமயம் இங்கே குறிப்பிடத்தக்கது ஆகும்.

***“பொருகடல் ஈழத்து அரசர்தம் முடியும்***
***ஆங்கவர் தேவியர் ஓங்கெழில் முடியும்***
***முன் அவர் பக்கல் தென்னவன் வைத்த***
***சுந்தர முடியும் இந்திரன் ஆரமும்***
***தெண்டிரை ஈழ மண்டல முழுவதும்”***

என இவ்வெற்றிகளை இராசேந்திரன் மெய்க்கீர்த்திகள் விளக்கமாக அறிவிக்கின்றன. பக். 212.

* * *

1029இல் இருந்து 1041 வரை ரோகண நாட்டை ஆண்ட ஐந்தாம் மயிந்தன் காசிபன் என்ற விக்கிரம பாகு இலங்கை முற்றிலும் வெல்லும் அவாவில் போர் புரிந்து மாண்டான் என்று சோழர் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. அவனுக்குப்பின் மூன்று ஆண்டுகள்



தடை விதித்தது. தடையை அகற்றிய பின்பும் கூடக் கடைசி நிமிடம் வரை ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. மக்களின் வரிப்பணத்தில் இயங்கும் இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத் தாபனம், அரசாங்க விளம்பர மானியம் பெறுவதன் மூலம் அதன் ஆளுகைக்குட்பட்ட தேசிய பத்திரிகைகள், அரசு திரைப்படப்பிரிவு முதலிய நிறுவனங்கள் தமது தேசியக் கடமையில் இருந்து தவறி நின்றன.

* * *

மகாநாட்டிற் கலந்து கொண்ட பன்னாட்டுப் பேரறிஞர்களுக்கு நன்றி நவில்வதற்காக, சனவரி 10 ஆம் நாள் மாலைப்போது கூடிய கூட்டம் மகாநாட்டு நிகழ்ச்சிகளின் சிகரமாக அமைந்தது. பழம்பெரும் மொழியாகிய தமிழையும் அதன் வாழும் பண்பாட்டையும் கற்பதற்காக வருகை தந்த நுண்மாண் நுழைபுலம் மிக்க கீழைத்தேயக் கல்வி வல்லாருடைய அமுத மொழிகளைக் கேட்கவும் அவர்களுக்குப் பிரியாவிடை கூறவும் ஏறத்தாழ ஐம்பதாயிரம் மக்கள் அங்குக் குழுமியிருந்தனர். எல்லையற்ற நெடுங்காலமாகப் புலவர்களும் ஞானிகளும் மகான்களும் பேசி வந்த மொழியைப் பேசும் பேறு பெற்ற மக்களின், தூண்டுதலற்ற - தன்னிச்சையாக எழுந்த ஆர்வத்தின் வெளிப்பாடாக, கிராமங்களிலும் நகரங்களிலும் வீதியோரமெல்லாம் தென்னையும் பனையும் மூங்கிலும் பிறவும் பசுமையுடன் நீக்கமற நிறைந்து அலங்காரத்துடன் காணப்பட்டன. அவ்வாரம் முழுவதும் நிலைத்திருந்த எழுச்சி இறுதிநாளின் அந்த வேளையில் என்றுமே கண்டிராத பேரெழுச்சியோடு பரிணமித்தது.

அதோ, தென்னிந்திய முஸ்லீம் தமிழறிஞர் பேராசிரியர் நயினா முகமது அவர்கள் தாய் மொழியிலுள்ள புகழ்பூத்த அருஞ்செல்வங்களைப் பற்றிச் சொன்மாரி பொழிந்து கொண்டிருக்கிறார். கேளாரும் வேட்ப மொழியும் திறனாளராகிய பேராசிரியரின் பேச்சுத் திறத்தால் மக்கள் வெள்ளம் கட்டுண்டு கிடக்கிறது.

இன்பமயமான அக்கணத்திலே எவரும் எதிர்பாராத அந்தத் துன்ப நிகழ்ச்சி நடைபெற்றது.

எவ்வித முன்னறிவிப்புமின்றிக் கோழைத்தனமாக, ஆனால் திட்டமிட்ட முறையில் மக்கள் தாக்கப்பட்டனர். கண்ணீர்ப் புகைக் குண்டுகள், குண்டாந்தடிகள், துவக்குப் பிடிகள் முதலிய ஆயுதங்களால், நிராயுதபாணிகளான மக்கள் ஈவிரக்கமின்றித் தாக்கப்பட்டனர். அனைத்திலும் மேலான தம் உயிரை எண்மர் இழந்தனர். பலர் காயமுற்றனர். ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் மானபங்கப்படுத்தப்பட்டனர்.

தாக்குதலும் இனத் துவேசக் கூச்சல்களும் அன்றிரவு நகரிலுள்ள பல வீதிகளிலும் இடம் பெற்றன. இத்தாக்குதலும் இனத் துவேசக் கூச்சல்களும் தொலைவிலுள்ள இடங்களுக்கும் பரவிப்

கவாடம் என்பதன் பொருள் என்ன? அப்பொருள் எப்படி வந்தது? கவாடம் (கபாடம்) : கதவு. கலிங்கத்துப் பரணியில் வரும் "கவாடம்" திறமினோ என்னும் கடைதிறப்புப் பகுதியால் வெளிப்பட இப்பொருளை அறியலாம்.

கவாடம் தமிழ்ச் சொல்லா?

மேல்வாய் கீழ்வாய் இரண்டாலும் இறுக்கிப் பற்றுதல் கவ்வுதல். கவ்வுதல் தமிழ்தானே! கவாடமும் தமிழே.

கையால் பற்றிக் கொள்ளுதல் 'கைது' எப்படி? யானை கொம்புகளுக்கு இடையேயுள்ள கையால் பற்றிக் கொண்டதை எவரேனும் தவிர்க்க இயலுமா?

"யானைதன் கோட்டிடை வைத்த கவளம் போலக் கையகத்தது. அது பொய்யாகாதே" என்பது புறநானூறு. ஔவையார் பாட்டு. 'கையகத்தது' - கையது - கைத்து - கைது.

"**கையது**வேலே"

"**கைத்து**ண்டாம் போதே" என்பவை அறிக.

விடாமல் பற்றி இறுக்கிய கை 'கவவுக்கை'

'கவவுக்கை நெகிழாமல்' என்பது சிலம்பு. உள்ளத்துள்ள வஞ்சம் வெளிப்படாது வைத்துக் கொள்ளுதல் 'கவடம்' கவ்விப் பிடிப்பதாய் அமைந்த கதவு, 'கவவு' ஆயது.

அடம் சொல் ஈறு, ஆடம் நீளல். கவவு+ஆடம்= கவவாடம் - கவாடம்

அடம், தாழ்வடம், பாம்படம் (அணிகலங்கள்)

உவவு-உவா

கவவு-கவா

கவா+அடம்=கவாடம்

தமிழ்வளம் காட்டும் தகவார்ந்த சொல் 'கவாடம்' ; 'கபாடம்' ஆக்கினாலும் தன் முகத்தைப் பளிச்சிடக்காட்டி விடுகிறது. இன்னும், கவைத்தலை, கவைக் கொம்பு, கவைக்கோல், கவை நா, கவான் (தொடை) கவட்டுக்குள் பாய்தல், என்பவற்றை நினைக.

ஆவும் ஆவேறும் இணைதல், **கவடித்தல்** எனப் பொதுமக்கள் வழக்கு இருத்தல் அறிக.

வள்ளலார்,

**"கொவ்வைச் சாறும் கோள்வெடி யுப்பும்**
கவ்வக் **கலந்து கட்டியில் பூசுக"**

என்பது தம் அன்பர்க்கு மருத்துவக் குறிப்பாக எழுதிய பாடற் பகுதி.



கவாடபுரம் கடல் கொண்டபின் திருமாறன் வடக்கே நகர்ந்தான். நேரே மதுரைக்கு வந்தான் அல்லன். கடல் கொண்ட கவாடத்திற்கும் சங்கம் வைத்த மதுரைக்கும் இடையே அவன் இருந்த இடம் மணலூர் என்பது.

அந்த மணலூர் எது?

"கடல் கோளுக்குத் தப்பி உய்ந்த பாண்டியன் முடத் (முட்டத்) திருமாறனும் செந்தமிழ்ப் புலவர்களும் சிறிது வடக்கே சென்று மணலூர் என்னும் ஒரு சிறு நகரத்தில் தங்கினார்கள். இவர்கள் சிலகாலம் அந்நகரில் தங்கியிருந்து பின்னர் மதுரை மாநகரை அடைந்தனர். இப்பாண்டியனும் அந்நகரை வளப்படுத்தித் தனக்குரிய தலைநகராக்கிக் கொண்டு கடைச்சங்கத்தை அங்கு நிறுவினான்" என்கிறது பாண்டியர் வரலாறு (பக். 10. தி.வி. சதாசிவப் பண்டாரத்தார்). கவாட புரத்திற்குச் சிறிது வடக்கே மணலூர் இருந்தது. அவ்வூரில் பாண்டியன் தங்கினான். அம்மணலூர் எது எனின் யாழ்ப்பாணமேயாகும்.

அதன் பழம் பெயர் 'மணற்றி' என்பது. மணற்றிட்டு, மணற்றிட்டை, மணற்றி என்பனவெல்லாம் வழக்கு மாற்றங்களே. யாழ்ப்பாண வரலாறு அதன் பெயர் மணற்றி என்றதை அறிக. அவ்வூர் அகழ்வு ஆய்வால் கடலுள் ஆழ்ந்து பின்னர் மேடிட்டு அமைந்ததை அறிக.

முச்சங்க வரலாறு கூறும் நூல்களுள் ஒன்றாகிய இறையனார் களவியல் உரையில் 'மணற்றி' 'மணற்றி நங்கை' என்பவை கூறப்பட்டிருத்தல் நோக்க வேண்டுவதாம். மணற்றி பாண்டியர்க்கு உரியது என்பதைப் பாண்டிக் கோவை என்னும் நூற்பெயரே தெளிவிக்கும்.

மின்னேர் ஒளிமுத்த வெண்மணல் மேல்விரை நாறுபுன்னைப்
பொன்னேர் புதுமலர் தாய்ப்பொறி வண்டு முரன்று புல்லா
மன்னேர் அழிய **மணற்றி**வென் றான்கன்னி வார் துறைவாய்த்
தன்னேர் இலாத தகைத்தின் றியான்கண்ட தாழ்பொழிலே

கண்டமை கூறல் என்னும் அகப்பொருள் துறைக்கு எடுத்துக் காட்டு ஆகிய பாட்டு இது. 'பாண்டிக் கோவை'யைச் சார்ந்தது. இறையனார் களவியலில் மேற் கோளாகக் கொள்ளப்பட்டது (3).

ஓம்படுத்து உரைத்தல் என்னும் அகத்துறைக்கு எடுத்துக் காட்டாகப் பாண்டிக் கோவையில் இருந்து இறையனார் களவியல் காட்டும் பாட்டு.

**"கொங்கை தளரினும் கூந்தல் நரைப்பினும் ஏந்தல்மற்றிவ்**
**அங்கை அடைக்கலம் என்றே கருதி அருள் கண்டாய்**

களே உலகமாந்தர் அனைவருமாவர்” என்று அறுதியிட்டுக் கூறுகின்றார்.

குமரிக் கண்டத்தில் இருந்த மலை யாறு நகர் ஊர் அனைத்தும் கடலுக்குள் மறைந்தன. அக்கடல் கோளுக்கு இலக்காகாமல் ஒரு சிறு பகுதி மட்டும் எஞ்சித் தீவகமாக நின்றது. ஏழேழ் நாட்டின் நினைவுச் சின்னமாக நின்றது அத்தீவாகலின் அதனை ஏழேழ்நாடு என்றழைத்தனர். காலப்போக்கில் அத்தீவகம் ஈழநாடு என மருவி வழங்கப்படுகிறது. பண்டைத் தமிழரும் பன்னாட்டறிஞரும்

யாழ்ப்பாணத்தின் பழைய பெயர் **மணற்றி** என்பது அது பின்னாளில் **மணற்றிடல்** எனவும் வழங்கிற்று. இம் மணற்றி என்னும் பெயர் இறையனார் அகப்பொருள் உதாரணச் செய்யுள்களில் வருகின்றது. இதன் வடக்கும் கிழக்கும் வங்காளக் குடாக்கடலும், தெற்குப் பூநகரிக்கடல், பண்ணைக் கடல்களும், மேற்குக் கோடிக் குடாக்கடலும் எல்லையாம். அஃது இலங்கையின் வடபாகத்தே யுள்ள ஒரு துவீபகற்பம். அதன் அயலிலே காரைத்தீவு, வேலணைத் தீவு, புன்குடித்தீவு, அனால தீவு, நயினா தீவு நெடுந்தீவு முதலிய தீவுகளு முண்டு. இவைகளெல்லாம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தனவேயாம்.

பூர்வத்தில் இந்நாடு ஒரு சிறந்த நாடாய் இருந்தது. பின்னர்க் கடல் கொள்ளப்பட்டது. அதன்பின்னர் அது திடராகி மணல் கொண்டு கால அடைவில் மீண்டும் நாடாயிற்று. முன்னொரு காற் கடல்கொண்டழிந்த தென்பது, இந்நிலத்தின் கீழேயுள்ள கற்பாறை களிலே சிப்பிகளும் நத்தைகளும் பதிந்து கல்லாய்க் கிடத்தலாலும், வடகரையிலே கடலினுள் நெடுந்தூரம் கற்பாறைகள் காணப்படு தலாலும் துணியப்படும். இதற்கு ஆதாரப்பார் கருங்கற் பாறை (Boake’s Mannar).

* * *

இலங்கை ஈழமே ஆயினும் வடபாகமும் கீழ்பாகத்திலொரு பகுதியும் **ஈழமண்டலம்** எனப்படும். யாழ்ப்பாணம் ஈழமண்டலத்தில் ஒரு பகுதியாம். சேர சோழ பாண்டி மண்டலங்களோடு ஈழமண்டல மும் ஒன்றாகும். யாழ்ப்பாணச் சரித்திரம் பக் 1-3

* * *

ஈழநாட்டைக் கைக் கொண்டவர்கள் சேர சோழ பாண்டி மண்டலங்கள் என்னும் தமிழ் நாட்டில் இருந்து வந்த தமிழர். அவர்கள் தமக்கு இராசதானியாகக் கொண்டிருந்த நகரம் மாதோட்டம். அவர்கள் குடிகொண்ட மற்றொரு நகரம் திரிகோண மலை. மாதோட்டத்திலேயுள்ள திருக்கேதீச்சுரம் என்னும் சிவாலய மும், திரிகோணமலையிலுள்ள சிவாலயமும் பண்டு தொட்டு இவர்களாற் பரிபாலிக்கப்பட்டு வந்தன. இச்சிவாலயங்களும் சங்கும்



**5. வையையாடல்** - பரராச சேகரன் காலத்திலேயுள்ளதென்பர். செய்தவர் வையாபுரி ஐயர் இதுவும் சில செய்யுள் தவிர அகப்படவில்லை.

பின்னைய நான்கும் பழைய நூல்கள்.

ஆ. முத்துத் தம்பிப்பிள்ளை

(ஆசிரியர், யாழ்ப்பாணச்சரித்திரம்)

யாழ்ப்பாணம், நாவலர் கோட்டம் 22. 7. 1912.

தமிழர்களே ஆதிநாகர்கள். அவர்கள் வாழ்ந்த நாடு நாகநாடு. பழந்தமிழர்களுள் பலர் நாகர் பெயர் பெற்றிருந்தனர்:- எ-டு அம்மெய்யன் நாகனார், இளநாகனார், இனிசந்த நாகனார், எழுவுப்பன்றி நாகனார். தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார், நன்னாகனார், நன்னாகையார், பொன்னாகன், மதுரைக் கடையத்தார் மகனார் வெண்ணாகனார், மதுரைப் பூதன் இளநாகனார், மதுரைப் பூவண்ட நாகன் வேட்டனார், மதுரைப் பெருமருது இளநாகனார், முப்பேர் நாகனார், முரஞ்சியூர் முடிநாகரையனார், விரிச்சியூர் நன்னாகனார், வெள்ளைக்குடி நாகனார்.

அசோகர் காலத்தில்தான் இலங்கைக்குப் புத்தமதம் சென்ற தாகச் சொல்லப்படுகிறது. அந்த அசோகருடைய கல்வெட்டுகள் அனைத்திலுமே சேர சோழ பாண்டிய நாடுகளைப் பற்றிக் குறிப் பிடப்படுகிற இடத்திலெல்லாம் 'தாம்பிரபரணி' என இலங்கையும் குறிப்பிடப்படுகிறது. இதிலிருந்து அசோகர் காலத்தின் இலங்கை சேர சோழ பாண்டிய நாடுகளைப் போல தமிழர்கள் வாழ்கின்ற நாடாகவே இருந்துள்ளது என்பது விளங்குகிறது.

- D.R. Bhandarkar : Lectures on the
Ancient History of Indian from 650 to 325 B.C.

ஆங்கில வரலாற்றாசிரியர் வி.ஆர். ஸ்மித், பண்டைக் காலத்தில் தமிழர்கள் அடிக்கடி படையெடுத்துச் சென்று இலங்கையை அரசாண்டதாலும், அடிக்கடி தமிழர்களுக்கும் சிங்களர்களுக்கும் போர் மூண்டதாலும், மகேந்திரர் தமிழ்நாட்டுக்கு வந்ததையும், தமிழ்நாட்டில் இருந்தே இலங்கைக்குப் பௌத்தம் பரவியதையும் இலங்கை நூல்கள் பகை காரணமாகவே கூறாமல் விட்டுவிட்டன. மகத நாட்டில் இருந்து பௌத்தம் நேரடியாக இலங்கையை அடைந்தது என்னும் பெருமையை அடைவதற்காகச் சிங்கள பௌத்தர்கள் வேண்டுமென்றே அதை மறைத்து விட்டார்கள்' என்று தமது Pas ASOKA என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

தொகுப்பு : ஆவிளையன்

மூன்றாம் உலகத் தமிழீழ மாநாட்டு மலர்.

## பழந்தமிழகம்

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இப்போது தனித் தீவாகப் பிரிந்திருக்கிற இலங்கை, தமிழகத்தோடு இணைந்து ஒரே நிலப்பரப்பாக இருந்தது. அந்தக் காலத்தில் கன்னியாகுமரிக்குத் தெற்கிலும் கிழக்கிலும் பாண்டி நாட்டொடு இணைந்திருந்த நிலம் இலங்கையொடு இணைந்து சேர்ந்து ஒரே நிலப்பரப்பாக இருந்தது. பின்னர்க் காலந்தோறும் ஏற்பட்ட கடல்கோள்களாலேயே அந்த நிலப்பகுதி சிறிது சிறிதாகக் கடலில் முழுகி இப்போதுள்ள நிலையை



விஜயராஜன் பாண்டிய ராஜகுமாரியைத் தன் ராணியாக உரிய சடங்குகளுடன் அபிஷேகம் செய்தான். 7 : 72

தமிழர்களுடன் எப்போதுமே போரிட மாட்டோம் என்ற எண்ணத்துடன் இந்த உணவைச் சாப்பிடுங்கள் என்று அரசன் சொன்னபோது. 22 : 82

தீசன் உணவைத் தன் கையினால் தட்டினான். காமனி அதை எடுத்துத் தூர எறிந்தான். 22 : 83

(இராணி வந்து) மகனே கைகால்களை நன்றாக விரித்துக் கொண்டு தாராளமாகப் படுப்பதற்கென்ன? என்று அவள் கேட்டாள். அங்கே கங்கைக்கு அப்பால் தமிழர்கள் உள்ளனர். இந்தப் பக்கத்திலோ கோத சமுத்திரம் உள்ளது. 22 : 85

'கைகால்களை நீட்டிக் கொண்டு நான் தாராளமாகப் படுப்பது எங்கே?' என்று அவன் பதில் அளித்தான். 22 : 86

மகா கங்கையில் உள்ள எல்லாக் கடக்குமிடங்களிலும் தமிழர்கள் வராமல் தடுத்து நிறுத்த காவலர்களை அரசன் காகவனதீசன் நியமித்திருந்தான். 23 : 16

இளவரசன் காமனி தன் தந்தையாகிய அரசனிடம் 'தமிழர்கள் மீது போர் தொடுக்கப் போகிறேன் என்றான். 24 : 3

அரசன் அவனைப் பாதுகாப்பதற்காக அவனைத் தடுத்தான். நதிக்கு இந்தப் புறமுள்ள நாடு நமக்குப் போதும் என்றான். 24 : 4

நமது மார்க்கத்துக்குப் பெருமை தேட நதியின் மறுகரைக்குப் போகப் போகிறேன். 25 : 2

கண் பார்வையில் பிக்குகள் இருந்தாலே அது எங்களுக்கு ஆசியும் பாதுகாப்பும் அளிப்பதாக இருக்கும் என்றான். 25 : 3

மஹியங்கானாவுக்கு வந்து சேர்ந்த அவன் சத்தன் என்ற தமிழனை வெற்றி கொண்டான். அதே இடத்தில் அவனைக் கொன்று விட்டு அம்பதிட்டகத்துக்கு வந்தான். 25 : 7

தித்தம்பன் என்ற தமிழனை எதிர்த்து அவன் நான்கு மாத காலம் கடுமையாகப் போரிட வேண்டியிருந்தது. 25 : 8

பலமுள்ள எதிரியை அவனால் சூழ்ச்சியால்தான் வெற்றி கொள்ள முடிந்தது. தாயாரைக் காட்டி அவனை வெற்றி கொண்டான். 25 : 9

ஒரே நாளில் ஏழு தமிழர்களை வெற்றி கொண்டு அமைதியை நிலைநாட்டினான் 25 : 10

நதிக்கரையில் இருந்து உயிர்தப்பிய அத்தனை தமிழர்களும் விஜிநகரம் என்ற நகரத்துக்குள் சென்றடைந்தனர். 25 : 19

6. கொள்ளை கொள்ளையாய்த்
துள்ளும் இயற்கையை
அள்ளிக் கொழித்துயர்
வள்ளல் தாயவள் - வாழிய

7. ஞாலப் பழமொழி
சாலத் திகழ்மொழி
மேனலத் தமிழ்மொழி
மூலப் புகழ்நிலம் - வாழிய

இரா. இளங்குமரன்.

* * *

“நெடுஞ்சுடர் விளக்கம்
ஏந்தி வந்து நம்
நடுங்குதுயர் களைந்த
நன்னராளன்” வாழ்க!
- ஈழத்துப் பூதன் தேவனார் (அகநானூறு. 88).



மார்க்கத்தை நம்பாதவர்கள். தீய வாழ்வை மேற்கொண்டவர்கள். மிருகங்களை விட உயர்வாக மதிக்கப்படக்கூடாதவர்கள். 25 : 110

ஆனால் நீயோ புத்தருடைய போதனைகளுக்குப் பல விதத்திலும் பெருமை தேடப் போகிறவன். எனவே உன் மனதிலிருந்து கவலையை நீக்கு அரசனே என்று அவர்கள் ஆறுதல் கூறினர்.25 : 111

இவ்வாறு அவர்களால் கூறப்பட்ட அரசன் ஆறுதல் அடைந் தான். 25 : 112

விஹாரத்தை அமைத்தான். நூறாயிரம் பிக்குகளும் தொண்ணூறாயிரம் பிக்குணிகளும் வந்து கூடினர். 26 : 15

இந்தக் கூட்டத்தில் பிக்குகளிடையே அரசன் இவ்வாறு பேசினான்: பிக்குகளை நினைக்காமல் ஒருமுறை மிளகு ஒன்றைச் சாப்பிட்டுவிட்டேன். 26 : 16

அந்தச் செய்கைக்கு இது பிராயச் சித்தமாக இருக்கும் என்று எண்ணி அருமையான இந்த மாரிஸவதி விஹாரத்தையும் சேதியத்தை யும் அமைத்தேன். 26 : 17

‘பிக்குகள் இதை ஏற்க வேண்டும்’ இவ்வாறு கூறி அரசன் தாரைவார்த்து விஹாரத்தைப் பிக்குகளுக்கு அளித்தான். 26 : 18

இச் செலவு இருபது கோடிக்கு ஒன்று குறைவு என்று கணக்கிடப்பட்டுள்ளது. 26 : 25